பக்கங்கள்: 19 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை 13.06.2021 கதிர் 220

### இது ரகசியம் அல்ல!

என்னுடைய நான்கு தசாப்தத்துக்கு மேற்பட்ட பத்திரிகைத்துறை அனுபவத்தில் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் முதற்கொண்டு பல அரசியல் தலைவர்களுடன் பழகியிருக்கிறேன். இரண்டு விடயங்களை அவதானித்திருக்கிறேன். ஆயுதம் தாங்கிய

பக்கம்02

## யாழில் தமிழரின் காணிகளை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட

# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை சீன நிறுவனத்துக்கு விற்க விடோம்

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்

(இ.கலையமுதன்)

தமிழ் மக்களின் காணிகளை அபகரித்து யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைக்கப்பட்டுள்ள ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகையை சீன நிறுவனத்துக்கு வழங்க இணங்க முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

19



## கொரோனாத் தொற்றால் போதனாவில் ஒருவர் பலி

### பருத்தித்துறையைச் சேர்ந்தவர்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால்

2

### திடீர் எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து

## மொட்டுக் கட்சிக் கூட்டணிக்குள் பகிரங்கமாக வெடித்தது மோதல்!

### அமைச்சர் கம்மன்பில்லவுக்கு எதிராகப் போர்க்கொடி

ஆளும் பொதுஜன பெரமுன (மொட்டுக் கட்சி)கூட்டணிக்குள் நீடித்து வந்த மறைமுக மோதல் போக்கு திடீர் எரிபொருள் விலையேற்றத்தினை அடுத்து பகிரங்கத்துக்கு வந்துள்ளது.

எரிபொருள் விலையேற்றத்திற்கான பொறுப்பை விடயத்திற்கான

2

## ‘தாமரை மொட்டு’ அரசு ஒரு தேசிய அவமானம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசு ஒரு தேசிய அவமானம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ சாடியுள்ளார்.

உங்களால்

2

## யாழ்.மாவட்ட மக்கள் மிகவும் அவதானம்!

### அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில் பொது மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட

2

## பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும்போது மாணவர்களுக்கு வைத்திய பரிசோதனை!

### கல்வி அதிகாரிகளுக்குப் பிரதமர் ஆலோசனை



பாடசாலைகள் கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் திறக்கப்படும்போது நீண்ட காலமாக வீட்டில் இருக்கும் மாணவர்களின் நோய் நிலைமைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் கண்டறிய அவர்களை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறு

2



## யாழ் மாவட்டத்தில் நேற்று 86 பேருக்குக் கொரொனா

### வடக்கில் மொத்தம் 99 பேருக்கு

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 86 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 99 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 544 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றுத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டோர் விவரம் வருமாறு:-

2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போராளிகள் குழுக்களாக இருக்கும்போது வேறு ரகம். அரசியல்வாதிகளாக மாறி விட்டால் எல்லோருமே ஒரு குட்டையில் ஊறியவர்கள்தான்.

ஒன்று – அவர்களுக்கு இடையே நிரந்தர நட்பும் இல்லை, நிரந்தரப் பகையும் இல்லை. எந்த வேளையிலும் தோழன் காலை வாருவார்கள், தேவைப்பட்டால் எதிரி தோளில் கைபோடுவார்கள். கவுண்டமணி பாணியில் கூறுவது என்றால் 'இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா...!' என்ற போக்குத்தான்.

அடுத்தது – அவர்களைப் பொறுத்த வரை ஊடகவிலாளர்களும் தங்கள் வகையறாக்களைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம்தான் பெரும்பாலும். அது பல சமயங்களில் எங்களுக்கு – ஊடகவியலாளருக்கு – பொருந்தி வருவதில்லை.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

தமிழர் அரசியலில் ஒரு சின்ன மாற்றப்போக்குத் தென்படுவதாக எனக்குத் தெரிகின்றது.

*"இலக்கணம் மாறுதோ... இலக்கியம் ஆனதோ...?"* என்ற சினிமாப் பாடல் வரிகள் தாம் எனக்கு நினைவுக்கு வருகின்றன.

*"இதுவரை நடித்தது... அது என்ன வேடம்... இது என்ன பாடம்...?"* – என்று அந்தப் பாடல் வரிகளின் அடிப்படையில் கேட்கத் தோன்றுகின்றது.

தமிழரசு உள்வீட்டு இழுபறி இப்படித்தான் – இலக்கணம் மாறியது போல – திசை மாறுகின்றதோ என்று சந்தேகம் எனக்கு.

தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா ஒரு புறம். துணைப் பொதுச் செயலாளரும் பேச்சாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான சுமந்திரன் இன்னொரு புறம். இவற்றுக்கு நடுவில் ஊடகவியலாளர்களின் முடிந்து வைக்கும் கைங்கரியம் தன்பாட்டில் நடக்கும். அதுதான் இது வரையான கதை.

திடீரென இரண்டு தரப்பும் மோதல் தவிர்ப்பு உடன்பாடு கண்ட மாதிரி ஒரு நிலைமை. இடையில் நிற்கும் ஊடகவியலாளர்கள் அவ்வப்போது திரி கொளுத்திப் போட்டும் வெடிப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் புஸ்வாணமாய்ப் போய் விட்டன.

நேற்று முன்தினம் மீண்டும் சுமந்திரன் யாழ் வந்து விட்டார் என்றதும் நான் கொஞ்சம் உஷாரானேன். மாவிட்டபுரம் பக்கம் என் வட்டாரங்களை உஷார்ப் படுத்தினேன். கண்ணைக் கூர்மைப்படுத்தி, காதைத் தீட்டி வைத்துக் கொள்ளுமாறு வழிப்படுத்தினேன்.

என் சந்தேகம் சரிதான். எதிர்பார்த்த மாதிரி எனது செய்தி மூலம் ஒன்று – வட்டாரம் ஒன்று – நேற்றுப் பிற்பகல் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தது.

*"நீங்கள் சொன்னது சரிதான். சுமந்திரனின் வாகனம் மாவிட்டபுரம் பங்களாவுக்குள் நுழைகின்றது. இனி விடயத்தைத் தேடுவது உங்கள் விவகாரம்"* – என்றது என் வட்டாரம்.

சரி, ஆறுதலாகப் பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன். நேற்றிரவு சுமந்திரனைப் பிடிக்கலாம், எதுவும் நோண்டலாம் என்று தேடினேன். பிடிக்க முடியவில்லை.

ஒரேயொரு தடவை லைனில் வந்தார்.

*"என்ன மாவிட்டபுரத்தில் சந்திப்பாம், எப்படிப் போனது?"* – என்றேன்.

ஒன்றும் தெரியாதவர் மாதிரி *"அப்படியா? நோ கொமண்ட்ஸ்"* – என்றார் சடாரென முகத்தில் அடித்த மாதிரி.

எனக்கு இரண்டு விடயங்கள் விளங்கின. ஒன்று – இலக்கணம் (பாதை) மாறுகின்றது. அடுத்தது – இதற்கு மேல் விடயத்தை விடுப்புக்குத் தன்னும் தன்னிடம் கேட்காதீர்கள் என்பது.

சரி. சுமந்திரனை விட்டால், சுமந்திரனின் வலது கைகள், இடது கைகள் அல்லது அல்லக்கைகளைப் பிடிக்கலாம் என்று துழாவினேன். சுமந்திரனுக்கும் மாவைக்கும் இடையில் – இரண்டு தரப்புகளுக்கும் இடைக்கைகளாக – இருக்கும் தரப்புகளை நோண்டும்படி கேட்டுக் கொண்டேன். எல்லாம் வாய் திறக்கப் பின்னடித்தன.

போன தடவை சுமந்திரனுக்கு மாவை என்ன வகையறாக்களுடன் விருந்து கொடுத்தார் என்பது வரை அறிய முடிந்தது – இரு தரப்புக்களுக்கும் இடையில் அப்போது விரிசல் இருந்ததால்.

இந்த முறை மதிய விருந்து இருந்தது. ஆனால் அதற்கு மேல் விவரங்களை அறிய முடியவில்லை.

ஒரு மணி நேரம் இருவரும் மனம் விட்டுப் பேசினர் என்பதையும் அறிய முடிந்தது.

கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை என்ற பெயரில் மக்களின் காணிகளை அடாத்தாகப் பறித்து அந்த நிலத்தில் கட்டிய கட்டடம், மாவையின் அயல் பிரதேச விவகாரம், அவரைப் பொறுத்தவரை அது உணர்வுபூர்வமான விடயம். அது குறித்து சுமந்திரனும் இப்போது பகிரங்கமாகப் பேசி வருகின்றார். அதனால் அது குறித்து இருவரும் இரையாடியிருக்கக் கூடும் என நான் ஊகிக்கிறேன்.

அதற்கு அப்பால் இரண்டு தரப்புகளும் கட்டாய மௌனம் காப்பதில் உறுதியாக இருப்பதால் புதிய உறவுக்கும் மீண்டும் அணி சேரலுக்கும் சாத்தியம் நிறைய உண்டு.

பாவம் அல்லக்கைகள், அடுத்த மட்டத் தலைவர்கள். இவர்களின் முரண்பாட்டை நம்பித் தமக்குள் முட்டுப்பட்டவர்கள். இனி முழுசுவார்கள். அவ்வளவுதான்.

மாவையரின் பகல் கனவுக்கு, சுமந்திரனும் சேர்ந்து உடன்பாட்டாரோ, என்னவோ...? யாமறியோம் ஆண்டவனுக் குத்தான் வெளிச்சம்...!

ஏதோ தமிழரசும் தமிழ் மக்களும் பிழைத்துக் கொண்டால் சரி...!

– மின்னல்–

## பாடசாலைகள் மீள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் தகுதியுடைய மாணவர்களுக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பில் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலைகளை மீளத் திறக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு தமது சங்கத்தின் ஆதரவை கல்வி வலய மட்டத்தில் பெற்றுக்கொடுக்க முடியும் என சிறுவர் மருத்துவர் சங்கத்தின் பிரதிநிதிகள் இதன்போது பிரதமரிடம் தெரிவித்தனர்.

அதற்கமைய நாடு முழுவதும் உள்ள 99 கல்வி வலயங்களுக்கும் தமது சங்கத்தின் சார்பில் பிரதிநிதிகளைப் பெயரிட்டு மேற்படி நடவடிக்கையை முறையாக முன்னெடுப்பதாக சங்கத்தின் பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

கொரோனாத் தொற்று கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் உடனடியாக கட்டம் கட்டமாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன் ஏற்பாடாக ஆசிரியர்களுக்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையை சுகாதார அமைச்சின் ஊடாக நிறைவேற்றிக் கொள்ள முடியும் எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தடுப்பூசித் திட்டத்தில் தரம் 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும், 2 இலட்சத்து 79 ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் 3 இலட்சம் கல்விசாரா ஊழியர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதன் முக்கியத்துவம் குறித்தும் கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா விளக்கினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினர் மற்றும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியர்களைப் பாதுகாப்பதற்கு அரசு எப்போதும் நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

பாடசாலை ஆரம்பிக்கும்போது மாணவர்களும், ஆசிரியர்களும் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவது தொடர்பான வேலைத் திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும் எனவும் பிரதமர் அறிவுறுத்தினார்.

அத்தோடு பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து நடவடிக்கையின்போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## கொரோனாத் தொற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த 68 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதன் மூலம் யாழில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழ்.மாவட்டத்தில்நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்.மாவட்டத்தில் – 86 பேர் (வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக சங்கானை – 30 பேர், சண்டிலிப்பாய் – 28 பேர், யாழ். மாநகரசபை – 12 பேர், உடுவில் – 11 பேர், நல்லூர் – ஒருவர் மற்றும் மானிப்பாய் பிரதேச வைத்தியசாலை – 02 பேர், யாழ்.போதனா வைத்தியசாலை – இருவர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் – 12 பேர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலையில் – ஒருவர்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் பரந்தன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் நால்வரும், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும், கிளிநொச்சி கொரோனா வைத்தியசாலையில் ஒருவரும் புதிய தொற்றாளர்களாக நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## மொட்டுக் கட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் என்ற முறையில் அமைச்சர் உதய கம்மன்பில ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதற்காக அவர் உடன் பதவி விலக வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பகிரங்க அறிக்கையொன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விவகாரங்களுக்குப் பொறுப்பான சக்தி அமைச்சர் உதய கம்மன்பில்லை, மொட்டுக் கட்சிக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சியான பிவிதுரு ஹெலஉறுமயவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசத்தின் கையெழுத்துடன் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள இவ்வாறான சூழ்நிலையில், அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் பிரதானிகளை நிர்க்கதி நிலைக்கு உட்படுத்தும் நோக்குடன் அமைச்சர் உதய கம்மன்பில செயற்பட்டாரா எனச் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆட்சியை கைப்பற்றி, நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்லும் இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் எமது கட்சி மற்றும் அதன் தலைவரை அபகீர்த்திக்கு உள்ளாக்கியமை கண்டனத்திற்குரியது.

பொது மக்கள் அசௌகரியத்துக்கு முகம்கொடுத்துள்ள காலப்பகுதியில் எரிபொருள்களின் விலையை அதிகரித்தமைக்கான பொறுப்பை ஏற்று விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நேரடியாக பொறுப்பு கூறவேண்டும். அவர் பதவியிலிருந்து விலக வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'தாமரை மொட்டு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியவில்லை என்றால் முடியாது என்று கூறுங்கள் என்றும் அரசிடம் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், இது குறித்து 'ருவிட்டர்' பதிவொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசே வெட்கமாக இருக்கின்றது. நீங்கள் ஒரு தேசிய அவமானம். உங்களால் நிர்வகிக்க முடியாவிட்டால் முடியாது என்று கூறுங்கள். ஐக்கிய மக்கள் சக்தி செழிப்பான மற்றும் அபிவிருத்தியின் சகாப்தத்தை உருவாக்கும் என்றும் அவர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்.மாவட்ட மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்று குறைந்த நிலைமை இல்லாது அதிகரித்த நிலையே காணப்படுகின்றது

நேற்று (வெள்ளி) கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின்படி 139 நபர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இன்று காலை கிடைத்த பி.சி.ஆர்., அன்டிஜன் பரிசோதனைகளில் 19 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழில் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை மொத்தமாக 4 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது. இன்று வரை 53 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்தில் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தன. அதில் மூன்று கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் மற்றும் உடுவில் பிரதேச பிரிவுகளில் இரு கிராம சேவகர் பிரிவுகள் மாத்திரம் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன.

யாழில் 2 ஆயிரத்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 712 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். தற்போது சற்று கொரோனா நிலைமை அதிகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றதே தவிர குறைந்ததாக இல்லை. எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும்.

அதேநேரத்தில் தொடர்ச்சியாக தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன – என்றார்.



# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதியிலும் மோசடியாம்

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

இலங்கை இன்று இருக்கும் முக்கியமான கட்டத்தில் 227 பிராடோ வாகனங்களை 1.8 கோடி அமெரிக்க டொலர் இறக்குமதி செய்ய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஜே.வி.பி. கண்டித்துள்ளதுடன் இந்த வாகன இறக்குமதியின் பின்னால் பாரிய மோசடி இருப்பதாகக் கூறியுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க விடுத்துள்ள சிறப்பு அறிக்கையில் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

2021ஏப்ரல் 22 ஆம் திகதி வாகன இறக்குமதி செய்ய வங்கிக் கடன் கடிதம் (எல்.சி.) திறக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 2021 மே 18 அன்று அமைச்சரவை ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் கூட இந்த வங்கிக்கடன் கடிதம் திறக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் பின்னணியில் முழு செயன்முறையும் போர்ட் சிட்டி என்ற துறைமுக நகர யோசனைக்கு வாக்களித்த நாடாளுமன்றஉறுப்பினர்களுடன்செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை என்று கூறியுள்ளார்.

வாகனங்களுக்கான வங்கிக்கடன் கடிதங்கள், 2021 ஏப்ரல் 22 அன்று திறக்கப்பட்டன. மே 18 அன்று அமைச்சரவை ஒப்புதல் கோரப்பட்டது. இருப்பினும், மே 24 அன்று நடந்த அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அமைச்சரவை யோசனை நிராகரிக்கப்பட்டது.

எனவே இந்த வங்கிக்கடன் கடிதங்கள், அமைச்சரவை ஒப்புதல் இல்லாமல் திறக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில் வாகன இறக்குமதி தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான மறைமுக ஒப்புதலுடன் அமைச்சரவை அறிக்கை ஒரு மாதத்திற்குப் பிறகு வழங்கப்பட்டது.

எனவே இந்த முழு செயல்முறையும் ஊழல் மிக்க செயற்பாடுகள் என்று அநுரகுமார குற்றம் சுமத்தியுள்ளார். இதேவேளை வங்கிக்கடன் கடிதங்களைத் திறப்பதற்கு முன்னர் உரிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும், போட்டி ஏலங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும் வெளியிடுமாறு அவர் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

## சஹ்ரானுடன் தொடர்பு மேலும் இருவர் கைது

சஹ்ரான் ஹஷீமுடன் தொடர்பு வைத்திருந்த இருவர் கஹடகஸ்திகிலிய மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேசங்களிலிருந்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2018ஆம் ஆண்டு சஹ்ரான் ஹஷீம் உட்பட 5 பேருக்கு பாதுகாப்பு வழங்கியமை தொடர்பாக கஹடகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

இவ்வாறு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் கஹடகஸ்திகிலிய, முகரியாவ உப தபால் நிலைய பொறுப்பதிகாரியாகப் பணிபுரிந்தவர் ஆவார்.

இதேவேளை மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான நபர், இனவாதத்தைப் பரப்பியமை மற்றும் சஹ்ரான் ஹஷீமுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கைது செய்யப்பட்ட இருசந்தேகநபர்களையும் பயங்கரவாத விசாரணைப் பிரிவின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண மேலும் தெரிவித்தார்.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park

BRRENS Fashion Planet
Reborn Signature MINISTER
எங்களிடம் பெண்களுக்கான அனைத்து ஆடைகளும். பிரத்யேகமான திருமணம், பூப்புனித நீராட்டு விழா மற்றும் சுப நிகழ்வுகளுக்கு சாறி பிளவுஸ் ஆரிவேக்ஸ் சிறந்த முறையில், குறித்த தவணையில் செய்து தரப்படும்.
பிரென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ஆடைகள்
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
Fb.Brrens Fashion Planet
Email.brensfashionplanet@gmail.com
075 527 9110
077 332 1937
021 2221 2777

சேவை
நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடைவு வைத்த நிறுவனத்துக்கு வருகை தந்து மீட்டெடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை.
AAA GOLD CENTRE
076 568 4346

இறைச்சிக் கோழி விற்பனை
புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...
070 330 5500
075 330 5500
077 888 9388
லண்டன் 1000/= (11 kg க்கு மேல்)
பிரான்ஸ்,ஜேர்மனி,பெல்ஜியம், டென்மார்க்,நெதர்லாந்
11 Kg க்கு 13,000/=
மேலதிக ஒவ்வொரு கிலோவுக்கும் 1100/=
1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி
சங்கானை | பளை | மன்னார்
கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை
நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு
கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு

Australian Skilled Visa
Engineers (Civil& Mechanical), Nurses, Engineering Diploma Holders in HNDE, NDES, NDT, C&G
Motor Mechanic, Auto Electrician, Fitter, Welder, Elecrician, ets - CGTTI, NAITA, ATI, AETI, College of Technology, Jaffna.
Australian Skilled - Recognised Graduate Visa
BSc. Engg from University of Morotuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOT LINE : 0766228891
தொடர்புகளுக்கு :-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email : sl.austvisa@gmail.com

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேவை; மீள் பரிசீலனை!

சமூக வலைத்தளங்களின் குரல்களை நெரிக்கும் விதத்தில் இலங்கை அதிகார பீடம் கொண்டு வந்திருக்கும் புதிய சட்ட விதிகள் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளன.

வெறுப்பூட்டும் பேச்சுக்கள், இனசௌஜன்யத்திற்கு வேட்டு வைக்கும் உரைகள், வன்முறையைத் தூண்டும் தவறான செய்திகளை வேண்டுமென்றே பரப்புதல் ஆகிய இழிவு நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பது உண்மைதான்.

ஆனால், அதற்காக, அரசமைப்பு மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு நினைத்தபடி – விரும்பியவாறு – பூட்டுப் போட்டுத் தடை விதிக்க முடியாது.

'ஐக்கியத்தைக் குழப்புதல், வெறுப்பைத் தூண்டுதல், கொவிட் – 19 தடுப்பு நடவடிக்கைகளை தடை செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளும் விதத்தில் பொய்ச் செய்திகள், படங்கள், வீடியோக்களைப் பரப்புதலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்' – எனத் தெரிவித்து பொலிஸ் மா அதிபர் சார்பில் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண வெளியிட்ட பொலிஸ் தரப்பு அறிவிப்புத் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கின்றது.

வன்முறை, வெறுப்புரைகளைத் தூண்டி, ஐக்கியத்தைக் குழப்பும் விதத்தில் தவறான – பொய்யான – செய்திகளைப் பரப்புவோர் கைது செய்யப்பட வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

ஆனால், எது பொய்யான, தவறான, வன்முறை அல்லது வெறுப்புணர்வைத் தூண்டி ஐக்கியத்ததைக் குழப்புகின்ற செய்தி என்பதைத் தீர்மானிப்பவர்கள் யார்? அப்படி முடிவு செய்து, ஆள்களைத் தம்பாட்டில் கைது செய்யும் சட்ட அதிகாரத்தை பொலிஸ் அதிகாரியிடம் அல்லது நிறைவேற்றதிகாரத்தைப் பிரயோகிக்கும் ஓர் அதிகாரியிடம் அப்படியே ஒப்படைக்க முடியுமா என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எழுப்பும் கேள்வி நியாயமானதே.

இவ்விடயத்தை ஒட்டி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், இரு ஊடகவியலாளர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மீதான உயர்நீதிமன்றத்தின் மிகப் பிந்திய தீர்ப்பில் மூன்று நீதியரசர்கள் ஆயம் ஏகமனதாகக் குறிப்பிட்டுள்ள கருத்தை நினைவூட்டியுள்ளது.

*"ஜனநாயக சமூகத்தில் சிவில் மற்றும் ஜனநாயக சுதந்திரம் மிக முக்கியமானதாகும். அந்தச் சுதந்திரத்தை மக்கள் பிரயோகிக்கையில், அரச உயர் அதிகாரிகளையும் பொது நிறுவனங்களையும் அத்தரப்புகளின் செயற்பாடுகளையும் பொதுமக்கள் விமர்சிக்க அனுமதிப்பது கட்டாயமானது, மக்களுக்கு அந்த உரிமை உள்ளது.*

*"அரச தரப்பு மற்றும் அரசியல் கட்சிகளையும் அவற்றின் கொள்கைகள் திட்டங்களையும் விமர்சிப்பது ஜனநாயகத்தின் அடிப்படையாகும். அந்த அடிப்படையில் மாற்றுக் கருத்துகள் வெறுமனே பொறுத்துக் கொள்ளப்படும் விடயமாக அல்லாமல், அதையும் தாண்டி ஊக்குவிக்கப்படும் அம்சமாக நோக்கப்பட வேண்டும்."*

– இப்படி உயர்நீதிமன்றம் மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் வழங்கிய தீர்ப்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

உயர்நீதிமன்றம் தெரிவித்தமை போல ஜனநாயக நாட்டில் கருத்து வெளியிடும் சுதந்திரம், ஆட்சித் தரப்புகளையும், கட்சிகளையும் வெளிப்படையாக விமர்சிக்கும் உரிமை ஆகியன பிரதானமானவை.

இப்போது சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது, பொய்ச் செய்திகள், தகவல்களைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுப்பது என்ற பெயரில் அரசுத் தரப்பு எடுத்திருக்கும் இந்த நடவடிக்கை, உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்ட – அரசமைப்பின் மூலம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமை என்று வலியுறுத்தப்படுகின்ற – மக்களின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை அடியோடு பறித்து விடும், மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் என்ற குரலை நசித்து விடும் என்றெல்லாம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

ஒருவர் வெளியிடும் விமர்சனம் அல்லது கருத்து அரசமைப்பின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள கருத்து வெளியிடும் சுதந்திரத்துக்கு உட்பட்டதா அல்லது வெறுப்புணர்வு, இன முரண்பாடு, ஐக்கியத்துக்கான பாதிப்பு ஆகியவற்றைத் தூண்டுவதா என்பதை முடிவு செய்வது மிகப் பொறுப்பு வாய்ந்த, நிபுணத்துவம் மிக்க பணியாகும்.

சாதாரண பொலிஸ் அதிகாரியிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைப்பது பல அத்து மீறல்களுக்கு வழி செய்துவிடும்.


நீதியை நிலைநாட்டப் புறப்பட்டு அநீதியை நிலை நிறுத்தும் வேலையாகி விடும் அது. இன்னொரு வழியில் கூறுவதானால் குளிக்கப் போய் சேறு பூசும் காரியமாகி விடும்.

சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளை பகுத்தாய்ந்து முடிவு செய்யும் பொறுப்பை பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைப்பது ஆபத்தானது. பல துஷ்பிரயோகங்களும், தவறான நடவடிக்கைகளுக்கும் அது வழி கோலும். பக்கச் சார்பான – பாகுபாடான – புறம் ஒதுக்குகின்ற நடவடிக்கைகளுக்கும் தாராளமான வழி செய்யும்.

இது விடயத்தில் நடைமுறைப் பிரச்சினைகளை அரசு மீண்டும் ஒரு தடவை பரிசீலனை செய்வது உகந்தது.

## அரசு வெளியிடும் கருத்துக்களால் அநாதரவான நிலையில் மக்கள்!

### எல்லே குணவண்ஸ தேரர் வருத்தம்



ஊடகங்களை நோக்கும் போது அரசாங்கம் செல்லும் வழியை தெளிவாக காணக்கூடியதாக இருப்பதாகவும் ,அரசாங்கம் கூறும் ஒரு வார்த்தையிலும் நம்பிக்கை யில்லை. இதனால் மக்கள் அநாதரவாக்கப்பட்டுள்ளனர் எனவும் எல்லே குணவண்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் விபத்துக்குள்ளான கப்பல் குறித்து வெளியிட்ட விடயங்களில் இது மிகவும் தெளிவாக தெரிந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

குறிப்பாக நாட்டின் இதயம் போன்ற கொழும்பு கோட்டையில் உள்ள அரசுக்கு சொந்தமான கட்டடங்களை வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்ய மேற்கொண்டுள்ள திட்டங்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்.

அரச வளங்களை இப்படி விற்பனை செய்வதால், எதிர்கால சந்ததிக்கு நாடு இல்லாமல் போய்விடும். ஒரு சட்டம், ஒரு நாடு பற்றி பேசினாலும் அரசாங்கத்தினர் வெளியிடும் கருத்துக்களால் மக்கள் அநாதரவாகியுள்ளனர் எனவும் எல்லே குணவண்ஸ குறிப்பிட்டுள்ளார்.

## ஆடைத் தொழிற்சாலை பஸ் மீது வவுனியாவில் கல்வீச்சுத் தாக்குதல்



வவுனியா முருகனூர் பகுதியில் ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்ட இளைஞர் குழுவொன்று தப்பிச் சென்றுள்ளது.

முருகனூர் பகுதியில் நேற்று (சனிக்கிழமை) காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

சிதம்பரபுரம், ஆச்சிபுரம் பகுதியிலிருந்து வவுனியா இராசேந்திரகுளம் ஓமேக்கா ஆடைத் தொழிற்சாலை நோக்கி 28 ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸின் மீது முருகனூர் விவசாய பண்ணைக்கருகே முகங்களை மறைத்தவாறு நின்ற இளைஞர் குழுவினர் கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

கல்வீச்சுத் தாக்குதலையடுத்து பஸ்ஸை சாரதி நிறுத்திய போது பஸ்ஸினுள் புகுந்த அந்த இளைஞர் குழுவினர் சாரதி மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு அந்த இடத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளனர்.

குறித்த பஸ் கண்ணாடிகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளமையுடன், சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஊழியர்கள் எவருக்கும் காயங்கள் எவையும் ஏற்படவில்லை. ஆடைத்தொழிற்சாலையால் கொரோனாத் தொற்று பரவுவதாக வடமாகா ணத்தில் பல பகுதிகளில் எதிர்ப்புக்கள் வெளியாகி வருகின்ற நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் குற்றத்தடுப்பு பிரிவினரின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(100)

## குழந்தைக்கு மது அருந்தக் கொடுத்த இளைஞருக்கு ஒரு லட்சம் ரூபா பிணை

4 வயது குழந்தைக்கு மதுபானம் அருந்தக்கொடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞனை ஒரு லட்சம் ரூபா தனிப்பட்ட பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பேலியகொடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த இளைஞன் கொழும்பு பிரதான நீதிவான் புத்திக சி ராகல முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் 4 வயதுக் குழந்தைக்கு மதுபானத்தை அருந்தக் கொடுத்து அதனை காணொலியில் பதிவு செய்து சமூக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளார் எனப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்த பொலிஸார், குழந்தையை கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதித்து குழந்தையின் மனநிலை தொடர்பாக அறிக்கை ஒன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளனர் என நீதிமன்றில் தெரிவித்தனர்.

குறித்த அறிக்கை கிடைத்த பின்னர் குழந்தை ஏதாவது விதத்தில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகி உள்ளதா என்பது தொடர்பில் அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனபொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

முறைப்பாடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி அழைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## வவுனியாவில் மேலும் 44 பேருக்கு தொற்று

வவுனியா, சகாயமாதாபுரத்தில் 29 பேர் உட்பட 44 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்று இரவு வெளியாகின.

அதில், சகாயமாதாபுரம் பகுதியில் இருபத்தொன்பது பேருக்கும், திருநாவற்குளம் பகுதியில் எட்டுப்பேருக்கும், மகா இலுப்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், குருமன்காடு பகுதியில் ஒருவருக்கும், இறம்பைக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவருக்கும்,

தாலிக்குளம் பகுதியில் பொலிஸார் ஒருவருக்கும், தேக்கவத்தைப் பகுதியில் ஒருவருக்கும், வவுனியாவில் தங்கியுள்ள ஒட்டுசுட்டானைச் சேர்ந்த ஒருவருக்கும் என 44 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா சகாயமாதாபுரம் கிராமத்தில் ஏற்கனவே 67 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் தற்போது 29 பேர் புதிதாக இனங் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் இக் கிரா மத்தில் 96 பேர் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.


திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.
அருந்ததி
இணைய திருமண சேவை
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
www.arunthathee.com | +94 777 164 524

# அருந்ததி

இணைய திருமண சேவை

+94 777 164 524
www.arunthathee.com

## மணமகன் விபரம்

**17965|ம|1993**
கொழும்பு 09| இந்து
Sri Lanka|172 செ.மீ
Proprietor
புனர்பூசம் (மிதுனம்)

**16766|வே|1992**
இளவாலை|இந்து
Sri Lanka|182செ.மீ
chief Surveyor
திருவோணம் (மகரம்)
செவ் : 07

**16889|வே|1992**
மீசாலை |இந்து
160செ.மீ | Sri Lanka
அவிட்டம் (மகரம்)
Proprietor
செவ் : 08 | கி.பா : 41

**16937| வே |1991**
அல்லாரை இந்து|AU
Staff|178செ.மீ
உத்தரம் (கன்னி)
செவ் : 07

**16739|வே|1991**
கிளிநொச்சி|இந்து
Charted Accountant
Qa|178செ.மீ |அனுஷம் (விருச்சிகம்)
சு. செவ் : 02

**17357|வி|1991**
யாழ்.நகரம்|இநது
Engineer|Sri Lanka
சதயம் (கும்பம்)
சு . செவ் : 06|168செ.மீ

**16763| வே|1991**
கரவெட்டி|இந்து
Engineer| Canada
187செ.மீ
திருவோணம் (மகரம்)
செவ் : 08 |கி.பா : 27

**16811|கு|1991**
பருத்தித்துறை |இந்து
Sri Lanka |Sport officer
சு. செவ் : 09
புனர்பூசம் (கடகம்)
175 செ.மீ

**17974|வே|1991**
சுருவில் |இந்து
Director|சு. செவ் : 05
புனர்பூசம் (மிதுன்ம்)
175செ.மீ

**16916|வே |1991**
திருநெல்வேலி|இந்து
185செ.மீ |Sri Lanka
Software Engineer
பூசம் (கடகம்) கி.பா : 08

**16982|வே|1990**
மட்டக்களப்பு|இந்து
Sri Lanka |179செ.மீ
Accountant
புனர்பூசம்(கடகம்)

**16925|வே|1990**
மிருசுவில்|இந்து
Junior Technical
Mate|Sri Lanka
பூசம் (கடகம்) |செவ் : 01
172 செ.மீ

**18070|கோ|1989**
கரவெட்டி|இந்து
Canada |Surveyor
மிருகசீரிடம் (ரிஷபம்)
175செ.மீ | சு. செவ் : 05

**16841|வே|1989**
திருநெல்வெளி|இந்து
Proprietor |Sri Lankan
சதயம்(கும்பம்)
சு. செவ் : 08 | 168செ.மீ

**18010 |வே|1988**
சுழிபுரம்|இந்து
in charge | UAE
அத்தம் (கன்னி)
201 செ.மீ |செவ் : 08

**17959|வே |1988**
வட்டுக்கோட்டை|இந்து
மிருகசிரிடம (மிதுனம்)
176 செ.மீ |Self
Employer | UK

**16733 |வே|1987**
அம்பாறை|இந்து
Sri Lanka |Lecturer
168செ.மீ |சு.செவ் : 03
கார்திகை (ரிஷபம்)

**18016|வே|1986**
கொழும்பு 15|இந்து
168செ.மீ |Sri Lanka
Assistant Manager
ரேவதி(மீனம்) | RC

**18022|ப|1984**
நீர்வேலி |இந்து
Supervisor
AU| 158செ.மீ
பரணி (மேடம்)

**16910|வே|1984**
கொழும்பு 06 |இந்து
Software Engineer
கேட்டை (விருச்சிகம்)
176செ.மீ | Sri Lanka
செவ் : 07| கி.பா : 55

**16907| வே |1983**
கரவெட்டி|இந்து
Canada | 185செ.மீ
Business
விசாகம் (விருச்சிகம்)
செவ் : 04

**16964|வே|1981**
வல்லெட்டி|இந்து
Uk | 172 செ.மீ
System Administrator
சித்திரை (துலாம்)

**16322|வே|1979**
அளவெட்டி|இந்து
Building construction
Netherland
175 செ.மீ
புனர்பூசம் (மிதுனம்)

**16820 |பி| 1976**
கரவெட்டி | இந்து
இலங்கை | செவ் : 01
Development Officer
158 செ. மீ
உத்தரம் (மகரம்)

## மணமகள் விபரம்

**17986|கோ|1998**
வரணி | இந்து
Student | செவ் :2
மூலம் (தனுசு)
157செ.மீ | Sri Lanka

**16231|அ|1996**
கொழும்பு 15 | இந்து
உத்திரட்டாதி (மீனம்)
சு.செவ் : 07 |165செ.மீ

**15838 |ந |1996**
சுன்னாகநகரம் |இந்து
சதயம் (கும்பம்)
Sri Lanka
165 செ.மீ |செவ் : 02

**16952|வே|1995**
புலோலி |இந்து
திருவோணம் (மகரம்)
Sri Lanka
சு.செவ் : 12 |168 செ.மீ

**16808|வே |1995**
கோண்டாவில் | இந்து
சு.செவ் : 12|Sri Lanka
மூலம் (தனுசு)
154செ.மீ | சு.சே 12

**16862|வே|1994**
உடுப்பிட்டி|இந்து |SL
Management Service
Officer |கி.பா : 64
அஷ்வினி (மேடம்)
160செ.மீ|செவ் : 07

**16955|ந|1994**
கொடிகாமம் | இந்து
Sri Lanka
ரேவதி (மீனம்)
157 செ.மீ | செவ் : 07

**15673 | வே |994**
புத்தூர் | இந்து
Public Relation Officer
Sri Lanka | இந்து
அத்தம் (கன்னி)
158 செ.மீ |சு.செவ் : 07

**16898|வே|1993**
கோண்டாவி|இந்து
Searching
சுவாதி (துலாம்)
Sri Lanka |161 செ.மீ
சு. செவ் : 01

**16694|கோ1992**
கோப்பாய் |இந்து
Sri Lanka
Teacher
ஆய்யிலியம் (கடகம்)
154செ.மீ

**16760|வே |1991**
யாழ்.நகரம்|இந்து
Executive in Bank
அத்தம் (கன்னி)
Sri Lanka
164செ.மீ |செவ் : 02

**16748 |கு |1991**
பருத்தித்துறை|இந்து
Sri Lanka |Teacher
157செ.மீ |
செவ் : 12
திருவாதிரை (மிதுனம்)

**16514| கு|1991**
வேலணை|இந்து
Sri Lanka
Development Officer
செவ் : 04 |154 செ.மீ
அஸ்வினி (மேடம்)

**18025| வே|1989**
கொக்குவில்|இந்து
UK |Accounting
பூரம் (சிம்மம்)| 168செ.மீ

**16754| வே|1984**
திருகோணம்|இந்து
Analyst in Bioanalysis
Canada|பூரம் (சிம்மம்)
155 செ.மீ

**18037|மு|1983**
கண்டி |இந்து|Srilanka
Senior Lecturer &
Academic Coordinator
செ.மீ 168
ரோகிணி (ரிஷபம்)

**16970|வே|1983**
திருநெல்வேலி|Srilanka
145செ.மீ
திருவாதிரை (மிதுனம்)
Audit Examiner
Divorced

**17516|வே|1975**
பருத்தித்துறை |இந்து
Sri Lanka|செவ் : 08
Deputy Branch Manager
at Bank |162 செ.மீ
புனர்பூசம் (மிதுனம்)

## LOCKDOWN வரன் தேடல்

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு (Profile No) இலக்கத்தை Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**பொருத்தமான வரனை WhatsApp, Viber இனூடாக அனுப்புவோம்.**

**ஜோதிடரிடம் செல்லமுடியவில்லையா? எங்கள் ஜோதிடர் மூலம் ஜாதக பொருத்தம் பார்த்து தருவோம்.**

**மணமக்கள் சந்திப்பு (பெண் பார்த்தல்) இணையம் மூலம் ஏற்பாடு செய்து தரப்படும்.**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

## 19ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**181. புவியின் துணைக்கோள் எது?**
**182. கிரிக்கெட் ஆட்டத்தின் போது மைதானத்தில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை எவ்வளவு?**
**183. 80ஆவது ஆண்டு நிறைவு விழா எவ்வாறு அழைக்கப்படும்?**
**184. மூல வர்ணங்கள் எவை?**
**185. இயற்கை துறைமுகம் அமைந்துள்ள இடம் எது?**
**186. இலங்கையின் பரப்பளவு எவ்வளவு?**
**187. இலங்கையின் சுவரோவியங்களுக்கு புகழ் பெற்ற இடம் எது?**
**188. ஐம்பூதங்கள் எவை?**
**189. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?**
**190. சர்வதேச யோகா தினம் எப்போது?**

பெயர் :- ..................................................
அடையாள அட்டை:- ..................................
முகவரி :- ................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ...........................

### 17ஆவது போட்டிக்குரிய பதில்கள்

161) Newstead Girls College
உடுவில் மகளிர் கல்லூரி - 1824
162) டொலர்
163) சத்தியசோதனை
164) தங்குதன்
165) தொலமி
166) மே 2ஆவது ஞாயிறு (2021இல் மே 09)
167) காகம்
168) தகர விழா / தசாப்த விழா
169) குமார சங்கக்கார
170) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

### 11ஆம் திகதி வெளியான 17ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. ஐ. கார்த்திகன் - யாழ்ப்பாணம் (09 கேள்விக்கு சரியான பதில்)
2. எஸ். வனோஜா - கொடிகாமம் (09 கேள்விக்கு சரியான பதில்)
3. பி. அர்ச்ஷிகா - ஆனைக்கோட்டை (09 கேள்விக்கு சரியான பதில்)

### 10ஆம் திகதி வெளியான 16ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்

1. A.துஷான் - நீர்வேலி (8 விடை சரி)
2. S.ஸ்ரீஇராமச்சந்திரன் - தாளையடி (9 விடை சரி)
3. R.மாலதி - உடுப்பிட்டி (8விடை சரி)
4. K.ஸ்ரீதரன் - கொழும்பு (8 விடை சரி)
5. S.வனோஜா - கொடிகாமம் (7 விடை சரி)

### 16ஆவது போட்டிக்குரிய பதில்கள்

151. பென்குயின்
152. பனை
153. ஜூன் 10
154. மர விழா
155. பாதரசம்
156. 8 கிராம்
157. பேதுருதாலகால மலை
158. பாக்குநீரிணை
159. 30
160. நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பு; அரசை கடுமையாக சாடுகிறார் சஜித்

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தைத் கடுமையாக சாடியுள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் திருத்தப்பட்ட புதிய எரிபொருள் விலைகளை கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் அறிவித்திருந்தது.

இந்த அரசாங்கம் தொடர்பாக வெட்கமடைவதாகவும் இது முழு நாட்டுக்கும் ஒரு துன்பகரமான நிகழ்வு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகரீதியாக நாட்டை ஆள முடியாது என்பதை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே இந்த நாட்டுக்கு செழிப்பையும் வளர்ச்சியையும் கொண்டு வர முடியும் என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

# உலகில் தோல்வியடைந்த பயணத் தடையே இலங்கையில் அமுல்படுத்தப்படுவது ஆகும்

## அரச மருத்துவ அதிகாரிகள் கூட்டமைப்பு தெரிவிப்பு

உலகில் மிகவும் தோல்வியடைந்த பயணத்தடை முறையே இலங்கையில் அமுல்படுத்தப்படுகின்றது என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர் ருக்ஷான் பெல்லன தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை முறைமை முற்றுமுழுதாக தோல்வியடைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பயணத்தடை அமுல்படுத்தலின் நோக்கம் எந்த வகையிலும் அடையப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பயணத்தடை விதிக்கப்பட முன்னதாக பதிவான மரணங்கள் நோய்த் தொற்று உறுதியாளர்கள் எண்ணிக்கைகளை விடவும் தற்பொழுது எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளதன் மூலம் இதனைப் புரிந்து கொள்ள முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

மரணங்களின் எண்ணிக்கை பத்து மடங்காக உயர்வடைந்துள்ளதன் மூலம் நிலைமையின் பாரதூரத்தன்மை வெளிப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணத்தடையை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வைத்தியர் பெல்லன தெற்கு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ்ந்துவிட முடியாது



தொகுப்பு - ப்ரியமதா பயஸ் -

எந்த ஒரு மனிதனும் தனித்து வாழ்ந்துவிட முடியாது. இந்த பரந்த உலகத்தில் நாம் எங்கிருந்தாலும் நமக்கு அன்பையும், நேசத்தையும் தரக்கூடியது உறவுகள்தான். அந்த அன்பும், நேசமும் நம்மை வாழ வைக்கும் சக்தி கொண்டது. பதவியும், பணமும் தராத ஒரு மனநிறைவை உறவுகளின் அன்பும், அனுசரணையும் தரும் என்பது உண்மையானது.

சங்க இலக்கியங்களில் அக வாழ்வு, புறவாழ்வு என்று வாழ்க்கையை இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். புற வாழ்வு என்பது அன்பும், அறனும் உடையது. அது உறவு நலன்களால் ஏற்படுவது. அக வாழ்வு என்பது வெளித்தோற்றத்தில் தெரியாதது. நம் ஆன்மாவை மகிழ வைப்பது. அக வாழ்வு புறம் சாராதது என்றாலும் அதற்கும் நம்மைச் சுற்றியுள்ள உறவுகளும், நட்புகளும் மிகவும் அவசியம்.

இன்றைய அவசர உலகில் உறவுகளிடம் உட்கார்ந்து பேசக்கூட பலருக்கும் நேரமில்லை. எல்லாவற்றையும் செல்போனிலேயே முடித்துக் கொள்கிறார்கள். அவசர தகவலுக்கு இருக்கவே இருக்கிறது எஸ்.எம்.எஸ்.

நல்ல விடயங்களைக் கூட நேரில் கூறி மகிழ முடியாமல் ஓடிக்கொண்டிருப்பவர்கள் ஏதோ சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது என்ற ரீதியில் செல்போனில் கருத்து பரிமாற்றம் மட்டும் செய்துகொள்கிறார்கள். இந்த ஓட்டம் எதற்கு? என்று அவர்களுக்கே தெரியாது.

எல்லோரும் எதையோ தேடுகிறார்கள். வாழ்க்கையின் ஓரிடத்தில் அது கிடைக்கவில்லை என்றதும் மனம் முழுவதும் இருள் சூழ்ந்து கொள்கிறது. ஓடி வந்த வேகத்தில் தொலைந்து போன உறவுகளும், நட்பும், மீண்டும் திரும்பி வராதா? என்ற ஏக்கத்தில் தனிமையை உணருகிறார்கள்.

தனிமை என்பது மிகவும் கொடுமையானது. அதை முழுமையாக உணர்ந்தவர்களுக்கு மட்டுமே அந்த கொடுமை புரியும். இந்த தனிமைக்கு யார் காரணம்? நாமேதான் உறவுகளை காப்பாற்ற முடியாததால் தனிமை வந்து ஒட்டிக்கொண்டது.

வாழ்க்கை ஓட்டத்தில் உறவுகளின் அருமை புரிவதில்லை. நின்று நிதானித்து புரிந்து கொள்ள அவகாசமில்லை. உறவுகளின் அருகாமையும், அன்பும் பக்கபலமாக இல்லாததால்தான் இன்று மனிதர்கள் விரக்திக்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகிறார்கள்.

# அனேக விடயங்களில் நாம் தோற்றுப் போவதற்கு முக்கிய காரணம்

எல்லா மனிதர்களையும் ஆட்டிப்படைக்கும் ஒரு விடயம், பயம். நாம் அனேக விடயங்களில் தோற்றுப் போவதற்கு முக்கிய காரணங்களில் பயமும் ஒன்று. பயம் நமக்கு நாமே போட்டுக் கொள்ளும் முட்டுக் கட்டை. அது முன்னேற்றத்தை காணாமல் போகச் செய்துவிடும். பேய் பிசாசு கதைகள் நமக்குள் ஏற்படுத்திய பயம் ஒருபக்கம். கவலை, முயலாமை, இயலாமை, இல்லாமை, வறுமை, மறுமை என பயமுறுத்தும் வேறுசில சங்கதிகள் இன்னொரு புறம். இவற்றில் ஏதாவது ஒரு பயம், ஒவ்வொருவரையும் எப்போதாவது ஆட்டிப்படைக்கிறது. இவற்றை எதிர்கொள்வது எப்படி?

மனிதர்களை மிகவும் அதிகமாகப் பாதிப்பது, பணத்தைப் பற்றிய பயம் தான். 'நாளைக்குப் பணம் கிடைக்குமா, கிடைக்கும் பணம் போதுமான அளவில் இருக்குமா, அதை வாங்கவேண்டும் , இதை வாங்கவேண்டும், வேறு என்ன செய்தால் சம்பாதிக்கலாம்? இப்படியே யோசித்துக் கொண்டு சந்தோசத்தை இழப்பவர்கள் ஏராளம். எதிர்காலத் தேவைக்கான பொருளாதாரம் பற்றி சிந்திக்க வேண்டியது அவசியம் தான். அதற்காக பயத்தை மனதில் வளர்க்கக் கூடாது. அளவான அக்கறை வந்தால் போதும். கிடைக்கும் வருவாயில் சிறிது சேமியுங்கள், ஆத்திர அவசரத்துக்கு உதவும் நல்ல நண்பர்களையும் சேமித்துக் கொள்ளுங்கள். பண பயம் ஓடிவிடும்.

இளைஞர்களை வாட்டும் பயம், காதல் தோல்வி. 'அவள் நம்மை விரும்புவாளா? என்பது ஆரம்பகால பயமாக இருக்கிறது. அந்த பயம் நீங்கினால், 'நம் காதலுக்கு அப்பா பச்சைக் கொடி காட்டுவாரா, தடை விதிப்பாரா?' என்று அடுத்த பயம். இப்படி பயந்த மாதிரியே தோல்வி நேர்ந்து விட்டால், காதலித்தவர்களில் அதிகம் நேசித்தவரின் நிலை பரிதாபத்துக்குரியதாகி விடுகிறது. உண்மையில், காதலுக்கு ஒரு சக்தி உண்டு. அது அளவிட முடியாத பலத்தையும் தரும், அழிவுக்கு இழுத்துச் செல்லும் வெறிகலந்த பயத்தையும் தரும். காதலை சரியான மன நிலையுடன் எதிர்கொள்ளாதவர்களுக்கு தடைக்கற்களே ஏராளம். பயத்தை விடுங்கள், புதிதாய் காதலும், வாழ்வும் துளிர்க்கட்டும்.

தோல்வி பயம், பல வெற்றிகளையும், நிறைய சாதனைகளையும் முடக்கியிருக்கிறது. சந்தித்த தோல்விகளை அடிக்கடி நினைத்துக் கொண்டிருப்பதும், முயலாமலே முடியுமா? என்று பயந்து பதுங்கிக் கிடப்பதும் வீழ்ச்சியையே தரும். பயம் மனதில் இருக்கும் வரை வெற்றி ஒரு எட்டாக்கனியே. தோல்வியில் பாடம் கற்கலாமே தவிர, பயம் தொற்ற அனுமதிக்கக் கூடாது. தோல்வி, வெற்றிப்பாதையை அடையாளம் காட்டும் அடிச்சுவடே தவிர வேறில்லை. பயத்திற்கு முக்கிய காரணம், ஒன்றைப்பற்றிய தெளிவின்மையே. எனவே தோல்விக்கும், பயத்திற்குமான காரணத்தை கண்டுபிடித்து தவிர்த்திடுங்கள். வெற்றி நிச்சயம்!

நினைத்ததைப் பேச முடிகிற, நினைப்பதைச் செய்ய முடிகிற சுதந்திரம் இருந்தால் தான் ஒருவரால் நிம்மதியாக இருக்க முடியும். சுதந்திரம் கிடைக்குமா, பறி போய்விடுமா? என்ற கவலையும், பயமும் நமது முன்னேற்ற இறக்கைகளை வெட்டி விடும். இந்தப் பயத்தைப் போக்க சுதந்திரம் கிடைக்கும் இடத்துக்குப் பறப்பதைத் தவிர வேறு வழியில்லை. உங்கள் எண்ணத்திற்கும், செயலுக்கும் சுதந்திரம் அளிப்பவர்களையே சார்ந்திருங்கள். 'எனக்கு விதிக்கப்பட்டது இதுதான்' என்று கூண்டுக்குள் அடைபட்டால், பறக்கும் பழக்கத்தையே மறந்துவிடும் பறவைபோல ஆகிவிடுவீர்கள்.

மற்றவர்கள் என்ன சொல்வார்களோ? என்று தயங்குவது நமது எல்லா செயல்களையும் முடக்கிப் போடக்கூடிய பயம். ஒருபோதும் நம்மால் எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களைப் பாராட்ட சிலர் இருப்பது போலவே தடுக்கவும், விமர்சிக்கவும் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். செயலைத் தொடங்கும் முன் ஒன்றிற்கு இரண்டு தடவை யோசிக்கலாமே தவிர, செயலில் இறங்கிய பிறகு பிறர் என்ன சொல்வார்கள்? என்பதை நினைத்து முடங்கக்கூடாது. உங்களைப் பற்றிய விமர்சனங்களை ஆராய்ந்து குறை நிறைகளை சரி செய்து கொள்ள வேண்டும்.



# உறவுகள் தான் வாழ்க்கை

உறவுகள் தான் வாழ்க்கை. உறவுகள் தான் உலகம். ஒரு மனிதனை சுற்றியுள்ள உறவுகளே அவனுக்கு பலம். அவனது வாழ்வில் மகிழ்ச்சியை அளிப்பதும் உறவுகளே. ஒரு மனித வாழ்க்கையின் வெற்றியே அவன் உறவுகளை கையாளும் விதத்தில் தான் உள்ளது. அப்படியானால் உறவுகளை போற்ற வேண்டியது எத்தனை முக்கியம்.

பெண்கள் உபசரிப்பின் நாயகிகள் என்பதால் உறவுகளை போற்றுவதிலும் அவர்களுக்கு அதிக பங்கிருக்கிறது. திருமணத்திற்கு முன்பு பிறந்த வீட்டிலும், திருமணத்திற்கு பிறகு புகுந்த வீட்டிலும் உறவுகளை மதிப்பளித்து கவனிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

உறவுகளின் அடித்தளமே அன்பு தான். ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதோடு, விட்டுக் கொடுக்கும் பண்பு உள்ளவர்களுக்கு மட்டுமே உறவுகள் கைகூடும். உறவுகளை எத்துணை மேன்மையானதாக நினைக்கிறோமோ, அத்துணை முன்னேற்றம் நமக்கு உண்டு.




ஒவ்வொருவருக்கும் உறவுகளை மேம்படுத்தும் இலக்கணங்கள் கற்றுத்தர வேண்டும். சிறுபிள்ளை முதலே உபசரிப்பு பண்புகளை ஊட்டி வளர்ப்பதன்மூலம் உறவுகளை மேம்படுத்தலாம். குறிப்பாக பெண்களுக்கு உறவுகளைப் பற்றி சொல்லித்தர வேண்டும். பிறந்த வீட்டைவிட்டு, புகுந்த வீட்டிற்குப் போகும் பெண்களுக்கு புதிய உறவுகளின் மேன்மையை விளக்குவது மிகமிக அவசியம்.

# Rockets in the Sky

What is the sky? Where is the sky? How high is it? What lies beyond the sky? I am sure that you have asked these questions. They are very difficult to answer, aren't they? If someone asked you: "What color is the sky?" I expect that you would answer: "Blue". I am afraid that you would be wrong. The sky has no color. When we see blue, we are looking at blue sunlight. The sunlight is shining on little bits of dust in the air.

Is the sky full of air? I am sure that you have asked this question, too. We know that there is air all around the earth. We could not breath without air. Aeroplanes can not fly very high because as they go higher, the air gets thinner. If we go far enough away from the earth, we find there is no air. There is only empty space.

In this space there is nothing except the sun, the moon and the stars. Scientists (people who study science) have always wanted to know more about the other bodies in space. They have looked at them through telescopes and in this way they have found out a great deal. They know many facts about the moon, for example, they know how big it is and how far away. But they wanted more knowledge about it. The only way to get this knowledge was to send men to the moon. Then they would know all about it.

The moon is about 384,000 kilometres away from the earth. An aeroplane can not fly to the moon because the air reaches only 240 kilometres. Then there is no air. But there is something that can fly even when there is no air.



Vaishnavi Ganeshalingam
2023 A/L Bio
J/Kokuvil Hindu College

This is a rocket. I am sure that you are asking: How does a rocket fly?" If you want to know, get a balloon and then blow it up, until it is quite big. Do not tie up the neck of the balloon. Let go! The balloon will fly off through the air very quickly. The air inside the balloon tries to get out. It rushes out through the neck of the balloon and this pushes the balloon through the air. It does not need wings like aeroplane.

This is how rocket works. It is not made of rubber like balloon, of course. It is made of metal. The metal must not be heavy but it must be very storng. There is a gas inside the rocket which is made very hot. When it rushes out of the end of the rocket, the rocket is pushed up into the air.

Rockets can fly far out into space. Rockets with men inside them have already reached the moon. Several rockets, without men inside them, have been sent to other worlds much father away. One day rockets may be able to go anywhere.

# The Quadruplets

Four factors, "Quadruplets", should be taken into account by every citizen, for the holistic development of human beings. The Quadruplets, include twin sisters and twin brothers also known as rights, responsibilities, duties and obligations. For example, for the better realization of your individual rights:


1- All civilians are equal and must be treated equally (Right)

2 - Understand the real meaning of the right (Responsibility)


3 - Enjoy without disturbing others (Duty)

4 - Do not harm others (Obligation)

As a better citizen of the country, we as children too were born with quadruplets. Therefore, understand your rights, raise your voice with responsibility, while respecting adults, and without causing injuries or damages to others. So, remember you were not born alone in this world. And also, twin sisters and twin brothers are inherited, inbuilt and invisible – inside you. Search, Find and rock!



Thanushkhan Thatparan
Grade 7
St. Thomas College,
Mount Lavinia



# Robert Bruce and the Spider

Most English school children are told this story by their teacher. It happened hundreds of years ago in Scotland, a country which is joined to England in the north. Today England and Scotland are one country but at that time they were two countries. Scotland was ruled by a king called Robert Bruce. England was governed by King Edward I.

Edward wanted to be King of Scotland too. The Scots said that the English were foreigners and they did not want to be ruled by a foreign king. So Edward attacked Scotland with an army. There are many battles which were won by the English. Robert Bruce fought bravely because he was not a coward, but he was beaten by the English.

The English tried to catch Robert and he had to leave Scotland. Sadly he went to a small island and hid in a hut. He had lost all hope of beating the English. 'What is the use trying anymore?' he said. Just then he saw a spider trying to make a web.

It had fastened one end of its thread to the ceiling and it was swinging in the air on the other end. It was trying to reach the floor with its thread. The thread broke and the spider dropped to the floor it climbed up the wall to the celling and tried again. The thread broke again. Again and again the spider tried. It would not stop trying. At last it succeeded.

Robert Bruce thought: 'If a spider can keep trying until it succeeds, I can do the some. I have tried to beat the English many times but I will try again. 'He went back to Scotland and gathered together his small army. King Edward was in England but he had left a big army in Scotland.

Robert Bruce and his followers attacked the English soldiers and began to push them back towards England. When King Edward heard this he decided to return to Scotland immediately.

On the journey north he died but he sent he son, Edward II, to continue the fight against the Scots. The two kings met in the famous battle of Bannockburn. Edward had 10,000 men in his army and Robert Bruce had only 3,000. But luck was on the side of the scots. Edward was a poor soldier and the English were defeated. The scots had won their freedom from English rule.

When children are told this story by their teachers, they are taught to remember the lesson leamed by Robert Bruce

"If at first don't succeed, try, try, try again."

By:- Agshara Lavan
Grade:- 06F
J/Nembadi girls high school


Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.

**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

காலைக்கதிர் Kalaikkathir

# DESCRIBING PIE CHART

The following pie chart shows the percentage of victims found in 'CORONA PANDEMIC' in Asian countries in 2020. Study the chart and write description. Use about 150 words.
The following words will help you:
(Highest, Lowest, Equal, More than, Less than, Majority, Minority)




The above pie chart shows the percentage of victims found in Corona pandemic in Asian countries in 2020. Seven countries mentioned in this chart. They are India, Turkey, Qatar, Sri Lanka, China, Maldives and Macao. The information is given in percentage.

The highest percentage of patients found in India, which is thirty-two percentage whereas the lowest percentage of patients were infected by COVID-19 in Macao. Seventeen percentage of patients were infected by COVID-19 in Turkey. Equal percentage of Corona patients were reported in two countries, they are Qatar and Sri Lanka. Twelve percentage of victims were found in China. Only eight percentage of corona patients identified in Maldives.

To conclude, majority of patients were found in India while minority of patients were found in Macao. An equal percentage of patients were found in Qatar and Sr Lanka.

Subeedshana Jeyakanth
2023 A/L Bio
Kn/Palai Central College.

# Learn Passive Sentences in Simple Present tense

The format of constructing sentences in passive is **object+ is/am/ are+ V3 (past participle) + by + subject**

Eg: **My mother prepares delicious dinner every day. (active voice)**

Subject: my mother
Verb : prepares
Object : delicious dinner

**Delicious dinner is prepared by my mother every day. (passive voice)**

Step 1: Write the object
Step 2: If it is **singular** so we should add **is**, if it is **plural** we should add **are, am** is used for I
Step 3: Write the **V3 (past participle)** of verb
Step 4: Write **by and subject.**

**Let's practise**

1. Mr Jones watches films.
2. The people speak English.
3. He reads comics.
4. We play volleyball.
5. They sing the song.
6. I take photos.
7. She does the housework.
8. The policemen help the children.
9. He writes poems.
10. Mother waters the flowers.

**Answers**

1. Films are watched by Mr Jones.
2. English is spoken by the people.
3. Comics are read by him.
4. Volleyball is played by us.
5. The song is sung by them.
6. Photos are taken by me.
7. The housework is done by her.
8. The children are helped by the policeman.
9. Poems are written by him.
10. The flowers are watered by mother.

Vinuja Sivananthan
2023 A/L Bio
Kn/ Palai Central College

# LIFE IN COVID-19




We live in a world where human beings run desperately in a race to fulfill their basic requirements and endless desires. Life is a beautiful journey filled with exuberant moments and exhausting obstacles. We all face challenging situations such as; disasters, accidents, attacks and pandemics. There had been several devastating pandemics that have occurred aro und the globe throughout our history, inclu ding the Spa nish flu, SARS, and now, Covid- 19.

Covid-19 is an infe ctious pandemic occurring worldwide, crossing international boundaries and affecting a large number of people. Before Covid-19, we lived normal lives with physical schooling, sports meet, projects, picnics and family gatherings on festivals and special occasions. Curre ntly, with Covid-19 pandemic, we all face numerous challenges while going to school online, maintaining social distancing, concentrating and communicating with friends and relations online. In the past during physical schooling, we only needed books, pens, tables, chairs, buildings, and some friends to study. However, during online school, we need an entire list which includes; laptops, earphones, books, backup connection and devices for safety, and so on.

Lockdowns, quarantine regulations and precautionary methods throughout the world have indeed created a tense environment. We long to live that adventurous life we lived earlier, which now seems to be a distant memory. Our lifestyles are complex and harder than ever.

Maintaining equality among family members in the house has been a critical arduous situation in our lives. Food or drinks cannot be shared and instead only masks and sanitizers can be supplied. It's hard to maintain social relationships and interactions when you can't meet them physically.

These changes and challenges in our life are inevitable. During these times we need to be polite, confident, altruistic, and, especially, be the friend, we wish we had. We've all learned to be optimistic and pass these milestones, for life has to move on. Self-motivation and realization are essential to achieve our goals successfully. Our future solely relies on our hands. So let us accept this new normal and live a peaceful and happy life.

Tharanya Thatparan
Grade 11
Bishop's college

## Read the passage and underline the correct answer in the bracket

Mrs Rani Fernando is a customer of commercial bank, Kilinochchi. Her account number is 808080. She wants to deposit a sum of Rs 10,000 in her saving account today. She also has to cash a cheque for Rs 8,000. She has to pay her electricity bill and water bill. So she needs some 500 rupees notes for that purpose

1. The customer needs to (<u>deposit</u>/withdraw) some money
2. She has (Rs 5,000, <u>Rs 10,000</u>) in he hand.
3. She has to (cash/<u>deposit</u>) a cheque for Rs.8,000.
4. She needs some money in (<u>500 rupees note</u> /1,000 rupees note) for the bill payment.
5. She has to (<u>pay</u> ,withdraw) two utility bills.

Atheethana Kugarajah
Grade 9
Kn/ Palai Central College.

# தாயகத்தின் சமூக சேவையில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்பு

உலகின் பல பாகங்களிலும் புலம்பெயர்ந்தோர் வாழ்ந்து வருகின்றனர். அந்தவகையில் புலம்பெயர்தல் என்பது Diaspora என்ற கிரேக்கச் சொல்லினை அடியொற்றிக் கையாளப்படும் சொல்லாகும்.


மக்கள் தாம் வாழும் நாட்டிலிருந்து வலிமையான தள்ளுவிசையின் காரணமாக பிற நாடுகளுக்குச் சென்று சிதறி வாழ்வதைக் குறித்து நிற்கின்றது இது. அதாவது சொந்த தாய் நிலத்தை விட்டு வேறொரு நாட்டிற்குச் சென்று வாழ்வதாகும். உலகின் பல பாகங்களில், பல்வேறு நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வாழ்வோர் தமது சொந்த நாடுகளின் வளர்ச்சிக்கு பல்வேறு பங்களிப்புக்களை ஆற்றி வருகின்றனர். அந்தவகையில் புலம்பெயர்ந்தோர் பல்வேறு விதங்களில் சமூக சேவைகளை ஆற்றி வருகின்றனர். சமூக சேவை என்பது பொது மற்றும் தனியார் ஆளும் குழுக்கள், மக்கள் மற்றும் சமூக சேவைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புக்கள், சமூகத்தின் பிரதிநிதிகளால் கடினமான சூழ்நிலைகளை சமாளித்தல் மற்றும் தணிக்கும் நோக்கில் உதவிகளை வழங்குதல் ஆகும்.

இலங்கையில் தமிழ் மற்றும் சிங்கள இனங்களிடையே வெவ்வேறுபட்ட சித்தாந்தங்களின் உருவாக்கத்தினால் இனரீதியிலான முரண்பாடுகள், வன்முறைகள், யுத்தம், விரட்டியடிப்பு போன்றவற்றின் விளைவாக – குறிப்பாக இலங்கை வாழ் தமிழர்கள் – சர்வதேச நாடுகளில் தஞ்சம் புக நேரிட்டது, இதனை புலம்பெயர்தல் என்கிறோம். அவ்வாறு புலம்பெயர்ந்தோர் புலம்பெயர்வாளர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இலங்கைத் தமிழரில் மூன்றிலொரு பங்கினர் இலங்கையை விட்டு வெளியேறி பிற நாடுகளில் வாழ்கின்றனர் என சில கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் இனத்தவர்களிடையிலான உள்நாட்டு குழப்பங்கள் நிமித்தமும் 1983 இல் இடம்பெற்ற கலவரங்கள் போன்றவற்றினாலும் பல்லாயிரக்கணக்கான வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து பூமிப் பந்தெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர். இப்படிப் பல்வேறு நாடுகளிலும் இருப்பவர்களையே பொதுவாக புலம்பெயர்ந்தோர் எனவும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது பிறப்பிட சமூகத்தின் நலவாழ்வு கருதி தாயகப் பகுதிகளில் பல்வேறு சமூக சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் இவ்வாறு தாயக மக்களுக்கான சமூக சேவைகளை செய்துவருவதில் பல்வேறு காரணங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. தமிழ் உணர்வு, பிறந்த இடம் மீதான பற்று, தமது பிறப்பிட சமூகத்தின் முன்னேற்றம் மீதான கவனம் போன்ற பலகாரணிகள் வெல்வாக்குச் செலுத்துகின்றன.

இவர்கள் தமது தமிழர் தாயகப் பகுதிகளுக்கு போர் நடைபெற்ற காலம் தொடக்கம் இன்று போர் முடிவுற்று ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும் தமது பங்களிப்புக்களை செய்து வருகின்றனர். தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமது சொந்த ஊர்களின் பெயரில் சங்கங்களினை ஆரம்பித்து, அங்குள்ளவர்களை ஒன்றிணைத்து, தத்தமது கிராமங்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் குறிப்பாக – ஆன்மீகச் செயற்பாடுகள், கல்வி, தொழில்சார் விடயங்களை ஊக்குவித்தல், மருத்துவ விடயங்களுக்கான உதவிகள், சமுதாய மட்ட அமைப்புக்களுக்கான உதவிகள், இடர்கால உதவிகள் போன்ற பல விடயங்களுக்கு தமது பங்களிப்புக்களை தனிநபர்களாகவும் அமைப்புக்களின் உதவியுடனும் மேற்கொண்டு வருகின்றனர்.



G. வேஜினி
(சமூகவியல் துறை மாணவி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**1. ஆன்மீக விடயங்களுக்கான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள்:-**

ஆன்மீக விடயங்களுக்கான புலம்பெயர்ந்தோர் கோயில்கள் புதிதாக கட்டுதல் மற்றும் கோயில்களின் புனரமைப்பு வேலைகளுக்கு உதவுதல், கோயில்களின் திருவிழாக்களுக்கான உதவிகள் போன்ற பல உதவிகளை செய்து வருகின்றனர். உதாரணமாக 2020 இல் யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் யாழ்ப்பாணம் புங்குடுதீவுப் பகுதியில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் புதிதாக கட்டப்பட்ட இந்து சமய தலங்களின் எண்ணிக்கை விகிதாரசார அளவில் அதிகமாக உள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆலயங்கள் அமைத்தலில் புலம்பெயர்ந்தோரின் நிதிப் பங்களிப்புக்கள் பிரதான இடம் வகிக்கின்றது. எனவே ஆன்மீகம் சார் விடயங்களில் புலம்பெயர்ந்தோர் செய்யும் சேவைகள் தாயகப் பகுதிகளில் அதிகரித்துள்ள நிலை காணப்படுகின்றது.

**2. கல்விசார் விடயங்களுக்கான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள்:-**

புலம்பெயர்ந்தோரினால் மேற்கொள்ளப்படும் கல்விசார் விடயங்களாக இலவச தனியார் வகுப்புக்கள் நடாத்துதல், உயர்தர மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்த கல்விக்கான உதவித் தொகை வழங்குதல், பாடசாலைகள் புனரமைப்பு மற்றும் பாடசாலைகளின் முக்கிய விழாக்கள் நடாத்துவதற்கான நிதி உதவிகள் வழங்குதல், கிராமப் பகுதிகளில் நூலகங்கள் அமைத்தல், கற்றல் உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல செயற்பாடுகளுக்கான உதவிகளை வழங்கி வருகின்றனர்.

இலங்கையில் தமிழர் நலன்சார்ந்து புலம்பெயர்ந்தோர் உதவியில் பல நிறுவனங்கள், அமைப்புக்களும் தமது பணிகளை ஆற்றி வருகின்றன. அந்தவகையில் தாயகத்தில் சுவிஸ் தமிழ் கல்விச்சோலை நூற்றுக்கணக்கான மாணவர்களிற்கான மாதாந்த கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவையும் சுவிஸ் சொலத்தூண் தமிழர் நலன்புரிச் சங்கம் மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை, சுயதொழில் முயற்சிகள், வாழ்வாதார உதவிகள், துவிச்சக்கரவண்டி, கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வந்தன. 2011 இலிருந்து இவ்வமைப்புக்கள் அன்பே சிவம் என்னும் பெயரோடு பணிகளைச் செய்து வருகின்றன. எனவே கல்விக்கு புலம்பெயர்ந்தோர் செய்யும் சேவைகள் நீண்ட காலத்தில் அபிவிருத்திக்கு வித்திடும் ஒன்றாக உள்ளது.




**3. தொழில்சார் விடயங்களுக்கான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள்:-**

சிறியளவிலான தொழில் முயற்சிகளுக்கான உதவிகள், பெண்களுக்கு தையல், அழகுக்கலை போன்ற பல சுய தொழில் முயற்சிகளுக்கான பயிற்சிகள், தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல், கைத்தொழில் பேட்டைகள் அமைத்தல் போன்ற பல விடயங்களுக்கான உதவிகளைச் செய்கின்றனர். எனவே இத்தகைய பங்களிப்புக்கள் நிரந்தர வருமானத்துக்கான ஒரு வழிவகையாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**4. மருத்துவ விடயங்களுக்கான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள்:-**

இலவசமாக அல்லது குறைந்த செலவுடன் மருத்துவ உதவிகளைப் பெற சிறியளவில் வைத்தியசாலைகள் நடாத்துதல், மருத்துவ செலவுகளுக்கு உதவுதல், நோயாளர்கள் பாராமரிப்புக்கான உதவிகள், மருத்து உபகரணங்கள் கொள்வனவிற்கான நிதிப் பங்களிப்புக்கள் போன்ற பல சேவைகளை ஆற்றி வருகின்றனர்.

**5. சமுதாய மட்ட அமைப்புக்களுக்கான புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள்**

தாயகப் பகுதிகளின் பல்வேறு கிராமங்களில் அங்கு இயங்கும் சனசமூக நிலையங்கள் போன்றவற்றை புனரமைத்தல், அவற்றின் மூலம் விளையாட்டுக்கள், பிற கலைசார்ந்த விடயங்களை ஊக்குவித்தல், பத்திரிகைகள் போடுதல், சனசமூக நிலையங்களில் நூலகங்கள் மற்றும் இலவச கணணி வகுப்புக்கள் நடாத்துதல், சனசமூகநிலையங்களை புனரமைத்தல், அவற்றின் ஆண்டு விழாக்களை நடத்துதல், வறியவர்களுக்கு உதவுதல், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் தாயகப்பகுதிகளில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாக உள்ளது.

இவை தவிர கிராமங்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. உதாரணமாக லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலய நிர்வாகத்தால் மட்டக்களப்பில் பல கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. மேலும் பொதுவான மண்டபங்கள் அமைத்தல், சிறுவர் பூங்காக்கள் அமைத்தல் போன்ற பல செயற்பாடுகள் புலம்பெயர்ந்தோர் நிதி உதவியுடன் தாயகத்தின் பல பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன.

**6. இடர்கால உதவிகள்:-**

புலம்பெயர்ந்து வாழ்வோர் போர்க்காலங்களிலும் சரி, போருக்குப் பின்னரான காலங்களிலும் சரி, தாயகப் பகுதிகளில் ஏற்பட்ட பல்வேறு இடர்நிலைகளில் தாயகப் பகுதி வாழ் மக்களுக்கு பல உதவிகளைச் செய்து வந்துள்ளனர். அந்தவகையில் இயற்கை அனர்த்த வேளைகள், அண்மைக்கால கொவிட் – 19 பரவல் சூழ்நிலைகளின் போது தொடர் ஊடரங்குச் சந்தர்ப்பங்களின் பல வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவதில் புலம்பெயர்ந்தோர் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

புலம்பெயர்ந்தோரின் இத்தகைய சமூக சேவைச் செயற்பாடுகள் அவர்களின் நாடுகடந்த ஈடுபாட்டின் வெளிப்பாடாகவே உள்ளது. தாயகப் பகுதிகளில் அவர்களினால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள் பயனுள்ள விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். தாயகம் வாழ் மக்களை தங்கு நிலைக்கு இட்டுச் செல்லாத விதத்தில் பயனுள்ள விடயங்களை எதிர்காலத்தில் புலம்பெயர்ந்தோர் பங்களிப்புடன் மேற்கொள்ளல் தாயகப் பகுதிகளின் அபிவிருத்திக்கு வித்திடும்.

காலைக்கதிர் Kalaikkathir



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 34

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**109. அமிர்தலிங்கம் இப்படியான பல நாடுகளுக்கும் தூது சென்றமையோடு இந்திரா காந்தியின் கோலம் தெளிவானதா?**

தெளிவுகள் வந்துகொண்டிருந்தன. ஒரு சில கோடுகள் மிகுந்திருந்தன. அதில் ஒன்றை ஆழமாக 1983 இல் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் நடந்த ஐ.நா. சபைக் கூட்டத்தில் அவர் வரைந்தார். தனது பிரத்தியோக காரியதரிசி ஜி.பார்த்தசாரதியை அழைத்து, அப்போது அங்கு கூடியிருந்த பல நாட்டு தலைவர்களுக்கும் அறிமுகப்படுத்தி எங்கள் பிரச்சினைகளை விளங்கப்படுத்த வழிவகுத்தார். அந்த ஐ.நா.கூட்டத் தொடரில் இந்திய பிரதிநிதிகள் ஊடாக, சிறிலங்காவின் வன்முறைப் பின்னணியில் தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது பற்றியும் பேச வைக்கின்றார். நாடு திரும்பியதும், கோலத்தின் நடுவில் பிள்ளையாரை அமர்த்துவது போல, தனது சில படைகளின் சில பகுதிகளை தென்பகுதி நோக்கி நகர்த்தி தென்கோடி கரையைப் பலப்படுத்துகிறார்.

ஆனால் துரதிஷ்டவசமாக 31 ஒக்டோபர் 1984 காலன் அவரைக் கொண்டு சென்றான். அவரது மெய் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்ட இரு சீக்கியர்களே எதிர்பாராத நிலையில் அவரை வீழ்த்தினார்கள். தமிழ் மக்கள் எல்லோருமே சோகத்தில் ஆழ்ந்தார்கள். தமிழ் பகுதிகளில் கறுப்புக் கொடிகள் தாமாகவே மக்களின் உணர்வுகளால் பறந்தன. அவ்வளவு புள்ளிகளும் கோலங்களும் வரைந்து ஒரு முற்றுப் பெறாத கோலமாயிற்று. இந்திய அரசியலிலும் சீக்கியர்களின் போராட்டங்களால் பல சிக்கல்கள் வளர்ந்தன. இலங்கையின் இனப்பிரச்சினை முக்கியமிழந்தது.

ஆனாலும் அமிர்தலிங்கம் தொடர்ந்தும் சென்னையிலிருந்து புதுடில்லியோடு ஈடுபட்டுக்கொண்டிருந்தார். ஆனாலும் விடுதலைக் குழுக்கள் காலூன்றியமையாலும் அவரதும் கூட்டணியின் தலைமைக்கே சவால்கள் வந்தன. அவர் சென்னையிலிருந்தும், தமிழக தலைவர்களின் உதவியோடும் கூட குழுக்களிடையே ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. அவர்களை கூட்டணியுடன் ஒரு குடைக்கு கீழ் கொண்டுவர முடியவில்லை ஆகவே எல்லோரையும் ஒரு பொது நிலைப்பாட்டுக்குக் கொண்டு வர ராஜீவ் காந்தி ஏற்பாடு செய்து திம்புவில் மகாநாடு கூட்டினார். அதிலிருந்து நடந்த பேச்சுவார்த்தைகளில் இருந்து இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாட்டையும் பின்னர் அமிர்தலிங்கம் ஒரு காலத்தில் தன் மெய்பாதுகாப்பாளராக, பக்கபலமாக இயங்கியவர்களாலேயே சுட்டுத் தள்ளப்பட்டமையையும் விவரித்து இருந்தேன். அவையும் எங்கள் அரசியலில் எங்களால், எங்களுக்கே நடத்தப்பட்ட இனப்படுகொலைதான்.

**110. ஏன் அப்படி சொல்கிறீர்கள்?**

உற்று நோக்கினால், விகிதாசார அடிப்படையில் ஆராய்ந்தால், சிறிலங்கா பொலிஸாராலோ ஆயதப் படையினராலோ (2009 முன்) கொல்லப்பட்ட தமிழ் மக்களிலும் பார்க்க தமிழ் விடுதலை போராளிக் குழுக்களினால் அவர்களிடமிருந்த இயக்க மோதல்களாலும், 'துரோகிகள்' என கணிக்கப்பட்டு கொல்



லப்பட்டவர்கள் அதிகம். அதைப்போல அழிக்கப்பட்டவர்தான் அமிர்தலிங்கமும் அவருடன் அன்று கொல்லப்பட்ட யோகேஸ்வரனும்.

இவர்கள் உரிமை போரினால் தங்களை வளர்க்க முற்படாத தலைவர்கள். அவர் தமிழர் உரிமை போரில் தமிழ் மக்களை முன்நிறுத்திச் செய்தவை பல. ஆகவே, அவர் அழிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த நியாயமும் இல்லை என்பது எனது மனக் கொதிப்பு. அதில் தாராளமான நியாயங்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க இருந்தது என்று அதைச் செய்வார்கள் கருதினால் நான் அவற்றைச் செவிமடுக்க விரும்புகிறேன்.

**111. நீங்கள் அமிர்தலிங்கத்தின் விசுவாசியா?**

இல்லை. அதுபோல் விடுதலைக் குழுக்களின் ஆரம்பகாலத் தலைவர்களிடமிருந்து பின் அவர்களுக்கு ஆதரவான புலம்பெயர் சமூகத்தின் இணைந்து செயற்பட்ட பலரோடு நெருக்கமாகப் பழகியிருந்தாலும் நான் அவர்களின் விசுவாசியும் அல்லன்.

தமிழ்மக்களின் உரிமைப்போராட்டத்துக்கும் அவர்களுக்கு ஒரு நீதியான நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டி உழைப்பவர்களுக்கு நான் விசுவாசி. அதற்காகவென்றே இயங்கியவர்களோடு சேர்ந்து பணியாற்றினேன். அவ்வளவே. அந்தப் போராட்ட வரலாற்றிலே அமிர்தலிங்கம் ஒரு கருவி. அவர் அழிப்பையொட்டி தமிழ்மக்கள் தம்மிடையே விசனப்பட்டு, வேதனையைக் கொட்டிவிட்டு, பெருவாரியாய் அதைத் தட்டிக்கேட்டு விடுதலைப் போராளிகளை வழிப் படுத்தவில்லை. அப்பொழுது அவர்களுக்கு ஆதரவாக இருந்த புத்திஜீவிகளும் கேட்கவில்லை. விடுதலைக் காகத் தற்போதைக்கு மறைப்போம், ஆனால் மறக்கவேண்டாம், காலம் வரும்போது கேட்போம் என்ற சடைதலில் எல்லாக் கொலைகளும் மறைந்து போயின. அமிர்தலிங்கம் இருந்த நாள்களில் ஆஸ்திரேலியாவில், முக்கியமாக நான் வாழ்ந்த மெல்போர்னில், விடுதலைப் புலிகள் முக்கியம் பெற்று அவர்களுக்கு ஆதரவாக இருந்த தமிழ்மக்கள் பெருமளவு இருந்தனர். அவர்கள் இங்கு இயக்கிய சங்கங்கள், நலன்புரி அமைப்புக்கள் பலவற்றிலும் இருந்து செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழ்ச் சங்கம் இங்கு தொடங்கப்பட்ட முதல் அமைப்பு. நான் இங்கு வந்த நாள்தொட்டு அதன் துணைத் தலைவராகப் பணியாற்றினேன். பின்னர் வளர்ந்த அரசியல் தாக்கங்களால் ஒதுங்கிக் கொண்டேனோ, ஓரங்கட்டப்பட்டேனோ அல்லது இரண்டும் கெட்டநிலையோ நான் அவர்களோடு இணைந்து இயங்கவில்லை. ஆனால் ஆஸ்திரேலிய தமிழர் கூட்டமைப்பு என்ற சங்கத்துடன் இணைந்



திருந்தேன். எவ்வாறாயினும் சிறு சமூகம் என்பதால் அரசியல் ரீதியில் குடைச்சல்கள் இருந்தாலும் தனிப்பட்ட ரீதிகளில் ஊடாட்டங்கள் இருந்தன.

நான் சங்கத்தின் அங்கத்தினர்களிடம் அவரது கொலைக்கு ஒரு கண்டனக் கூட்டம் நடத்தவேண்டும் என்று ஆதரவு கோரினேன். தனிப்பட்டரீதியில் கொலையை நொந்தவர்கள் ஏன் வம்பு என்றுதள்ளிப் போய்விட்டனர். ஆயின் சங்கத்துக்கு ஆர்வம் இருக்கவில்லை. இது செய்யப்படவேண்டும் என்று சில சலசப்புக்கள் எழுப்பி, எல்லோருமாகச் செய்யாவிட்டால் தமிழர் கூட்டணி கண்டனக் கூட்டம் நடத்தும் என்று அறிவிக்க, சில பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. அதன் பிரதிபலனாக அதனை அஞ்சலிக் கூட்டமாக இருசாராரும் இணைந்து செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது. அதில் சொல்லியும் சொல்லாமலும் ஒரு செய்தியைச் சொன்னார்கள்.

அது, அஞ்சலிக் கூட்டத்தில் பேசுவோர் யாரும் அவரை யார் கொன்றிருப்பார்கள் என்ற வியாக்கியானம் வைக்கவேண்டாம் என்று. அவர் மறைந்து விட்டார், அஞ்சலி செய்வோம், அதுதான் முக்கியம் என்ற ஏற்பாடுகளே இருந்தன. அவரை அறிந்தவர்கள், மதித்தவர்கள் பலபேர் அஞ்சலிக் கூட்டத்துக்கு வந்தார்கள்.

நான், சம்பவம் நடந்த அன்று அமிர்தலிங்கம் அங்கு நடத்திய கூட்டத்தின் பின்னணி அறிந்திருந்தேன். மங்கையற்கரசியுடனும் திருமதி யோகேஸ்வரனுடனும் சிலமுறை அன்று அதுபற்றித் தொலைபேசி தொடர்பில் இருந்தேன். ஆகவே யார் காரணம் என்று அறியக்கூடியதாக இருந்தது. எனது பேச்சில் இவற்றைத் தெரியப்படுத்தாவிட்டாலும், ஜே.வி.பியினர் செய்திருக்கலாம் என்ற அபிப்பிராயம் எழுப்பப்பட்ட பேச்சுக்களை மறுத்து, இது துர்ப்பாக்கியமாக எங்களது விடுதலை வீரர்களால் செய்யப்பட்டது என்பதை ஆணித்தரமாகச் சொன்னேன். சிலருக்கு அதிருப்தி. ஆனால் மௌனமாக இருந்த பலருக்குத் திருப்தி.

**112. நீங்கள் அவரின் விசுவாசியானமையால் தான் இதை முன்னெடுத்தீர்களா?**

இல்லை. நான் அவரது கட்சியில் இருந்தவன் என்றால் அல்லது விசுவாசி எனப் பார்க்கப்பட்டால் பின்நாள்களில் நடந்த பல அஞ்சலிக்கூட்டங்களுக்குப் போய்ப் பங்குபற்றியிருப்பேன். அவரது நினைவு மலர்களில் எழுதியிருப்பேன். அப்படியாக அவரது நினைவுகளை மீட்ட நான் பல இடங்களுக்கும் செல்லவில்லை. பின்னர் லண்டன் சென்ற சமயம் மங்கையற்கரசியைச் சென்று சந்தித்தேன். மனம் ஒழிந்த நிலையில், தடுமாற்றத்துடன் அவரது பிரிவால் வாட்டமுற்று ஒடுங்கியிருந்தார். அந்த நிலையில் சந்தித்து ஆறுதல் கூறினாலும் சம்பாஷணையில் பல வேதனைகள், ஓர் உறவை இழந்த சோகங்கள் இழையோடின.

(18ஆம் பக்கம் பார்க்க)



# நீதி



# சட்டம் ஒரு வெளிச்ச அறை

பஸ்றி ஸீ. ஹனியா
சட்டத்துறை மாணவி
யாழ். பல்கலைக்கழகம்.

நீதி என்ற விடயம் அனைத்து இடங்களிலும் நிறைந்து கிடக்கின்றது. எங்கு பார்த்தாலும் நீதி கோருவோர் ஒரு பக்கம், நீதி வழங்குவோர் மறு பக்கம், நீதி வழங்கப்படவில்லை எனக் கோஷமிடுவோர் எல்லாப் பக்கங்களிலுமே.

அனைத்துக்குமே நீதி வேண்டி நிற்கும்நமக்குநீதிபற்றியபுரிந்துணர்வு என்பது இன்றியமையாததாகும்.

நீதி என்ற கருதுகோளானது மனிதன் சிந்திக்க ஆரம்பித்தவுடனே ஆரம்பமாகிவிட்டது.

அந்தவகையில் நீதி என்பதற்கு ஒரு தீர்க்கமான வரைவிலக்கணம் கிடையாது. இருந்தபோதிலும் நீதி என்பதை அடிப்படையாகக் கொண்ட அத்தியாவசிய மதிப்புக்களின் தொகுப்பு எனலாம். இந்த மதிப்புக்கள் மரியாதை, சமத்துவம், மற்றும் சுதந்திரம் ஆகும்.

ஒரு முறையான அர்த்தத்தில் நீதி என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட விதி முறைகளின் தொகுப்பாகும். அவை திறமையான உயிரினங்கள் மூலம் அவமதிக்கப்படும்போது ஆணையிடுகின்றன, அமுல்படுத்துகின்றன, தடைகளை விதிக்கின்றன, பொதுவான நன்மையின் பாதிப்பை உருவாக்கும் செயல் அல்லது செயலற்ற தன்மையை அடக்குகின்றன எனலாம்.

இருந்தபோதிலும் நீதியானது ஒரு பிரதேசத்தின் நாகரிகத்துக்கேற்ப, கலாசாரம் மற்றும் வழக்கங்களுக்கேற்ப அது மாறுபடும். மேலும் இதன் பொருளானது குறித்த நாட்டின் கால மாற்றத்துக்கும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாறுபடும்.

ஒரு சமூகத்துக்கு நீதியாக விளங்கும் விடயம் அடுத்த சமூகத்துக்கு நீதி அற்றதாகத் தோன்றலாம்.

உதாரணமாக மரணதண்டனை என்ற விடயம் ஒருசில சமூகத்துக்கு நீதியானதாகவும், இன்னும் பல சமூகங்களுக்கு நீதியற்ற மிலேச்சத்தனமான செயலாகவும் தோன்றுகின்றது. அனைத்து இடங்களிலும் ஒரே நீதி காணப்படுமானால் நாடுகளுக்கு நாடு ஒவ்வொரு சட்டங்கள் தேவையில்லை. உலகையே ஒரு சமநிலைக்குக் கீழ் கொண்டு வந்துவிடலாம். ஆனால், அது முடியாத காரியம். ஏனென்றால், ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு சமூகமும், ஒவ்வொரு பிரதேசமும், ஒவ்வொரு சமூக ஒழுக்க நெறிகளில் உள்ளே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் பின்பற்றப்படும் நாகரிகங்களுக்கும் தெற்காசிய நாடுகளில் பின்பற்றப்படும் நாகரிகங்களுக்கும் இடையில் மிகப் பெரிய வித்தியாசங்கள் இருக்கின்றன. ஆகவேதான் எவ்வாறு சம நீதி வழங்க முடியும்? இதனால்தான் நீதிக்கான ஒரு பொதுவான வரைவிலக்கணத்தை வழங்க முடியாது இருக்கின்றது.

நீதியானது மதம், அறநெறி, பொருளாதாரம், சட்டம், அரசியல், பூகோள அமைப்பு , வழக்காறுகள், சூழ்நிலைகள் என்பவற்றுக்கேற்ப மாறுபடக் கூடியவை.

சட்டமானது உருவாக்கப்பட்டு அந்தச் சட்டம் பெரும்பான்மையானோர் நன்மை விளைவிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் . அவ்வாறான சட்டம் அனைவருக்கும் சமமாகக் கொடுக்கப்பட வேண்டும். அதேவேளை அவ்வாறு கொடுக்கப்படும் பெரும்பான்மையானோருக்கு நன்மையை விளைவிக்கும் அந்தச் சட்டமானது சிறுபான்மையினரின் உரிமைகளிலும் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக் கூடாது. அவ்வாறு இருக்கும் சட்டங்களின் படி நடத்துதல் நீதி ஆகின்றது.



நீதியின் சில வகைகளை எடுத்து நோக்குவோமானால்,

தண்டனை நீதி – குற்றம் புரிந்தவர்களுக்கு வழங்கும் நீதியாகும் .

இழப்பீட்டு நீதி – பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும் நீதியாகும்.

மறு பகிர்வு நீதி – சலுகைகள் மற்றும் சுமைகளை வழங்கும் நீதியாகும்.

மறு சீரமைப்பு நீதி – பாதிக்கப்பட்டவரின் நல்வாழ்வைக் கவனம் செலுத்தி சேதத்தைச் சரி செய்யும் நீதியாகும்.

பழிவாங்கும் நீதி – உடனடியாகத் தண்டனை கிடைக்கப்படாவிட்டாலும் நீண்டகாலத்துக்குப் பின்னர் அதற்கான தண்டனைகளை வழங்கும் நீதியாகும்.

மேலும் சட்ட நீதி, இயற்கை நீதி, அரசியல் நீதி, சமூக நீதி, பொருளாதார நீதி, நிர்வாக நீதி மற்றும் சமய நீதி என்று பல நீதி வகைகள் இருக்கின்றன.

நீதி என்பது புலன்களால் தொடர முடியாத பொருளாகும். அதனை உணர மட்டுமே முடியும். ஆகவேதான் அந்த நீதியானது வெறுமனே வழங்கப்பட முடியாது. நாட்டில் இருக்கும் சமூக, பொருளாதார, அரசியல், மத சட்டத்துறைகள் அனைத்துடனும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு முடிவுக்கு வந்த பின்பே நீதியைக் கொடுக்க முடியும்.

சாதாரண மக்களாக இருந்தால் என்ன, உயர் தரத்தில் இருக்கும் மக்களாக இருந்தால் என்ன, கீழ்த்தரத்தில் இருக்கும் மக்களாக இருந்தால் என்ன, சாதி, நிறம், மத, இனப்பாகுபாடுகள் எதுவுமே இல்லாமல் அனைவருக்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். இதற்காக எடுக்கப்படும் முயற்சியே நீதியின் ஒரு மிகப்பெரும் பரிமாணம் ஆகும்.

இத்தகைய முயற்சியே ஒரு சமூக நீதியை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு ஏற்படும் சமூக நீதி நாட்டில் உள்ள சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு வழிவகுக்காமல் சுபீட்சமாக அனைவரும் வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி நாட்டையும் உலகையும் சிறப்பாக வாழ்வதற்கேற்ற சூழலாக மாற்றுகின்றது.

இருந்த போதிலும் இவ்வாறு வழங்கப்படும் சம நீதியும் விமர்சனத்துக்குரியதே. மக்கள் யாவரும் சமமானவர்கள் இல்லை. அவ்வாறு சமமற்ற மக்களுக்கு சமமான நீதி வழங்குதல் என்பது பலருக்கும் இடையூறாக அமையலாம் என்று கூறப்படுகின்றது.

எது எதுவாக இருந்தபோதிலும் இலங்கை போன்ற பல கலாசார நாடுகளை எடுத்து நோக்கினால் வித்தியாசமான மொழி, மத, இன, சாதி வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். இவ்வாறான மக்களுக்கு சரியான நீதி வழங்கப்படவில்லையெனின் நாட்டின் சுபீட்சம் குழம்பும் என்பதற்கு எத்தனையோ ஆதாரங்களை நாம் அனுபவித்தும் இருக்கின்றோம். இன்று வரைக்கும் அனுபவித்துக்கொண்டும் தான் இருக்கின்றோம்.

> “சட்டங்கள் நீதியானதாக இருக்க வேண்டுமென்றால் சட்டம் இயற்றுபவர்கள் நீதியானவர்களாக இருக்க வேண்டும். அதற்கு மக்கள் நீதியான சட்டம் இயற்றும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.”

சட்டங்கள் நீதியானதாக இருக்க வேண்டுமென்றால் சட்டம் இயற்றுபவர்கள் நீதியானவர்களாக இருக்க வேண்டும். அதற்கு மக்கள் நீதியான சட்டம் இயற்றும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.

மக்கள் நீதியான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டுமானால் மக்கள் நீதி தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். அதற்கு மக்கள் நீதியானவர்களாக நடக்க வேண்டும்.

மக்கள் என்னும் பொருளில் ஒவ்வொரு குடிமகனும் இருக்கின்றான். ஆகவேதான் நீதி என்ற விடயம் எமக்குள்ள இருந்துதான் பிறக்கின்றது. எமக்குள்ளே என்ற மனப்பாங்கில் நீதி ஏற்பட்டு எம்மைப் போல் அடுத்தவர்களும் மதிக்கப்பட வேண்டும் என்ற மனப்பாங்கு மாற்றமானது நாளை உலக நீதியை நிலைநாட்டுவதற்கு முதற்படியாக அமையும். எனவே, நீதி கோரும் நாம் அனைவரும் நம்முள் இருக்கும் நீதியைச் சரி செய்ய வேண்டும். ஆனால், உலக நீதி சரியானதாகவே இருக்கும். ஏனென்றால் சட்டங்களை உருவாக்கும் பிரதிநிதிகளும் ஒரு குடிமகன்தான். ஆகவேதான் நீதி என்பது உருவாக்கப்படுபவை அல்ல எம்முள்ளே அடிப்படையாகவே இருக்க வேண்டியவை.

# நேற்றைய வினாக்களுக்கான விடைகள்

தரம் - 09 | விஞ்ஞானம் அலகு 06

**மனிதனின் குருதிச் சுற்றோட்டத் தொகுதி**

1.உடல் முழுவதும் பதார்த்தங்களைக் கொண்டு செல்லும் தொகுதி குருதிச் சுற்றோட்டத் தொகுதி ஆகும்.
2.மூடிய
3.இதயத்தின், குருதிக் கலன்களினுள்.

4. 1.
1.மேற்பெருநாளம்
2.சுவாசப்பை நாளங்கள்
3.வலது சோனையறை
4.அரைமதி வால்வு
5.முக்கூர்வால்வு
6.வலது இதயவறை
7.கீழ்ப்பெரு நாளம்
8.தொகுதிப் பெரு நாடி
9.சுவாசப்பை நாடி
10.சுவாசப்பை பெருநாடி
11.இடது சோனையறை
12.இருகூர்வால்வு
13.இடது இதயவறை
14. அரைமதி வால்வு
2.சோனையறைகள்
3.இதயவறைகள்
4.இடது சோனையறை, வலது சோனையறை
இடது இதயவறை, வலது இதயவறை
5. 1 - முக்கூர் வால்வு
2.இருகூர் வால்வு
6. 1 - சுவாசப்பை பெருநாடி
2.தொகுதிப் பெருநாடி
7.அரைமதி வால்வுகள்
8. 1 - அரைமதி வால்வு
2.அரைமதி வால்வு
9. 1 - மேற்பெருநாளம், கீழ்பெருநாளம்
2. வலது, இடது சுவாசப்பை நாளங்கள்

5.1.

| நாடிகள் | நாளங்கள் |
|---|---|
| 1.வரைவிலக்கணம் - இதயத்தில் இருந்து அப்பால் குருதியைக் கொண்டு செல்லும் குருதிக் கலன் கள் நாடிகள் எனப்படும். | வரைவிலக்கணம் - இதயத்தை நோக்கி குரதியைக் கொண்டு வரும் குருதிக் கலன் கள் நாளங்கள் எனப்படும். |
| 2.அதிக அமுக்கம் கொண்டது | குறைந்த அமுக்கம் கொண்டது. |
| 3.தடிப்பான சுவர் | மெல்லிய சுவர் |
| 4.சுவர்கள் மீள்தன்மையுடையன | சுவர்கள் மீள் தன்மையற்றன. |
| 5.வால்வுகள் இல்லை | இதயத்தை நோக்கித் திறக்கும் வால்புகள் உண்டு |

2.1- மயிர்த்துளைக் குழாய்கள்
2 - நாளம்
3 - புன்னாடி

3.தனிக்கலப்படையால்
4. 1 - போசணை
2 - கலங்களிலிருந்து அகற்றப்படும் பதார்த்தங்கள்

6.
1.திரவவிழையம்
2.குருதிச் சிறு துணிக்கைகள்
3
குருதி
→ குருதி சிறு துணிக்கை
→ திரவவிழையம்

1. செங்குருதிக் கலம்
2.வெண்குருதிக் கலம்
3. குருதிச் சிறு தட்டுக்கள்

1. நீர்
2.நீரிற் கரைந்துள்ளவை
3. நீரிற் கரையாதவை

4.செங்குருதிக்கலம், வெண்குருதிக்கலம்
5.குருதிச் சிறுதட்டுகள்

7.1.
1.சுவாசப்பையில் இருந்து கலங்களிற்குத் தேவையான ஒட்சிசனைக் காவுதல்.
2.குருதியினுள் செல்லும் நோய்க்காரணிகளை விழுங்கி அழிப்பதன் மூலமும் பிறபொருள் எதிரிகளை உற்பத்தி செய்வதன் மூலமும் உடலைப் பாதுகாக்கின்றது.
3 - குருதிச் சிறுதட்டுக்கள்.

2.ஈமோகுளோபின் எனும் செந்நிறப்பொருள்.
3.ஒட்சிசனுடன் சேர்ந்து ஒட்சி ஈமோகுளோபினாக.
4.நடுநிலை நாடி, இயோசி நாடி, மூல நாடி, நிணநீர்க்குழியம், ஒற்றைக் குழியம்.
5.டெங்கு, எலிக்காய்ச்சல்
6.பதார்த்தங்களைக் கொண்டு செல்லுதல்.
7.உணவின் சமிபாட்டு விளைவுகள், கனியுப்புக்கள், விற்றமின்கள் என்பன கலங்கள் வரை கொண்டு செல்லப்படல்.
கலங்களின் அனுசேபத் தொழிற்பாடுகளின் போது உருவாகும் கழிவுப் பதார்த் தங்கள் அவற்றை வெளியேற்றும் அங்கங்கள் வரை கொண்டு செல்லப்படல்.
ஓமோன்கள், புரதங்கள், நொதியங்கள், வாயுக்கள் என்பன தேவையான இடங் களுக்கு கொண்டு செல்லப்படல்
8.குருதி வகை
1.A, B, AB, O

2. $A^+$, $A^-$, $B^+$, $B^-$, $O^+$, $O^-$, $AB^+$, $AB^-$

9.
1.ஒருவரின் குருதியை இன்னொருவரின் உடலினுள் செலுத்துதல் குருதிக் குறுக்குப் பாய்ச்சல் எனப்படும்.
2.வழங்கி
3.வாங்கி
4.வழங்கியினதும் வாங்கியினதும் குருதிவகை, ரீஸஸ் காரணி (Rh காரணி)
5.AB
6.பொது வாங்கி
7.O
8.எவருக்கும் குருதியை வழங்கலாம்.

10.
1.ரீஸஸ் காரணியை கொண்டுள்ள வாங்கிக்கு ($Rh^+$)
ரீஸஸ் காரணியுள்ள ($Rh^+$) குருதி, ரீஸஸ் காரணியற்ற ($Rh^-$) குருதியை வழங்க முடியும்.
2.ரீஸஸ் காரணியற்ற ($Rh^-$) குருதி
3.

| | | வாங்கி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குருதிவகை | $A^+$ | $A^-$ | $B^+$ | $B^-$ | $AB^+$ | $AB^-$ | $O^+$ | $O^-$ |
| வழங்கி | $A^+$ | ✔ | ✗ | × | × | ✔ | × | × | × |
| | $A^-$ | ✔ | ✔ | × | × | ✔ | ✔ | ✗ | × |
| | $B^+$ | × | × | ✔ | ✗ | ✔ | × | × | × |
| | $B^-$ | × | × | ✔ | ✔ | ✔ | ✔ | ✗ | × |
| | $AB^+$ | ✗ | × | × | × | ✔ | ✗ | × | × |
| | $AB^-$ | × | × | × | × | ✔ | ✔ | × | × |
| | $O^+$ | ✔ | × | ✔ | × | ✔ | × | ✔ | ✗ |
| | $O^-$ | ✔ | ✔ | ✔ | ✔ | ✔ | ✔ | ✔ | ✔ |

4. 1. இதயநோய்கள், ஈரல் நோய்கள், குருதி பெருக்கு, குருதி நோய்கள்,சிறுநீரக நோய்கள், சுவாச, நுரையீரல் நோய்கள், சலரோகம். பாரிசவாதம், புற்றுநோய், வலிப்பு அல்லது மயக்கம் போன்ற நோய்கள் ஏற்பட்ட விபரம்.
2.கடந்த 6 மாத காலத்துள் சத்திரசிகிச்சைக்குட்பட்ட விபரம்.
3.குருதி வழங்கிய பின்னர் கடும் வேலைகள், பொதுப்பயணிகள் வாகன சாரதி, கன ரக வாகன சாரதி, உயரமான வேலையில் ஈடுபடுபவராக இருத்தல் பற்றிய விபரம்.
4.கர்ப்பம் தரித்தமை சார் விபரம்.
5.தாய்பாலூட்டுதல் பற்றிய விபரம்.
6.கடந்த 12 மாத காலத்துள் பிரசவம் அல்லது 6 மாத காலத்துள் கருச்சிதைவு
7.கடந்த 12 மாதங்களுள் பின்வருவனவற்றிற்கு உட்படாதவராக இருத்தல் பற்றிய விபரம்.
- நபர் அல்லது அவரின் துணை குருதி அல்லது குருதி உற்பத்தி பொருட்கள் அல்லது இழைய மாற்றீடு பெற்றுக்கொள்ளல்.
- பச்சை குத்துதல் அல்லது காது உடம்பில் துளையிடல் அல்லது அக்குப் பஞ்சர் சிகிச்சைக்குட்படுதல்.
- ஏதாவது தடுப்பூசி போடப்பட்டு இருத்தல்.
- ஏதாவது காரணத்திற்காக சிறையில் இருத்தல்.
- வெளிநாடு சென்றமை.
- செங்கண் மாரி.

5.
1. HIV, ஈரலழற்சி, சிபிலிஸ் நோய் தொற்றுதல் எப்போதாவது இருத்தல்.
2.பலருடன் பாலியல் தொடர்பு.
3.ஓரினப் பாலியல் தொடர்பு.
4.பாலியல் தொழிலில் ஈடுபடல்.
5.தெரியாதவருடன் பாலியல் தொடர்பு வைத்திருத்தல்.
6.பாலியல் தொற்று நோய்.
7.தொடர்ச்சியான கட்டி, நெறி.

11.
1.குறுக்குப் பாய்ச்சல் செய்த குருதி வாங்கியின் உடலினுள் திரட்சியடைதல் ஒருங் கொட்டுதல் எனப்படும்.
2. மேலும் குருதி இழக்கப்படுவது தடுக்கப்படும்.

12.
1.
1.மன அழுத்தமின்றி வாழ்தல்.
2.உடலில் சக்தி அதிகளவில் விரயமாகும் வகையில் வேலைகளில் ஈடுபடல் அல்லது உடற்பயிற்சி செய்தல்.
3.சரியான உணவுப் பழக்கங்களின் மூலம் உடலின் உயர நிறை விகிதத்தினை (BMI) விதந்துரைக்கப்பட்ட அளவில் பேணுதல்.
4.கறியுப்புப் பயன்பாட்டைக் குறைத்தல்.
5.உயர் குருதி அமுக்கம், நீரிழிவு போன்ற நிலைமைகளைக் கட்டுப்பாட்டில் வைத் திருத்தல்.
6.உணவுடன் அதிக பழங்களையும் காய்கறி வகைகளையும் சேர்த்துக் கொள்ளல்.
7.எண்ணெய்த் தன்மையுள்ள உணவுகளை அளவுடன் உட்கொள்ளல்.
8.புகைப்பிடித்தல், மதுப்பாவனை என்பவற்றைத் தவிர்த்தல்.
9. இதயநோய், உயர்குருதி அமுக்கம் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் குடும்பத்த வர்களுக்கு இருக்குமாயின் மிகவும் கவனமாக இருத்தல்.

2. சரியான உணவுப் பழக்கங்கள் மூலம் உடலின் உயர, நிறை விகிதத்தினை சரியாகப் பேணல்.

**ஆக்கம் - செல்வி ஜெனுஷியா கில்பேட் குணம்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யா/ செங்குந்த இந்துக் கல்லூரி)**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

**வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**யா/தேசிய கல்வியியற்கல்லூரி**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | சக்தியின் வடிவங்கள் | விஞ்ஞானம் அலகு 07

**சக்தி**

➢வேலை செய்யும் ஆற்றல் சக்தி எனப்படும்.
➢சக்தியை அளவிடும் சர்வதேச அலகு யூல் (J) ஆகும்.

**சக்தியின் வடிவங்கள்**


- வெப்ப சக்தி
- ஒலிச் சக்தி

1. ........................
2. ........................
3. ........................
4. ........................

**முதன்மை சக்திமுதல்**

5. ........................

**சூரியச் சக்தி இயற்கையில் சேமிக்கப்பட்டுள்ள முறைகள் (வடிவங்கள்)**




**உயிர்சுவட்டு எரிபொருட்கள்**

➢ பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் தாவரங்களும் விலங்குகளும மண்ணில் புதையுண்டு உயிர்சுவட்டு எரிபொருட்கள் தோன்றுகின்றன.

உ.ம்:-

- நிலக்கரி

6. ........................
7. ........................

* கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை பூரணப்படுத்துக.

| உபகரணம் | செயற்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த சக்தி வடிவங்கள் | தொழிற்படும் போது உருவாகும் ஏனைய சக்தி வடிவங்கள் |
|---|---|---|
| சுவர்கடிகாரம் | மின்சக்தி (மின்கலம்) | 8. ........................ |
| மின்குமிழ் | 9. ........................ | ஒளிச்சக்தி |
| விளையாட்டுக் கார் | மின்சக்தி (மின்கலம்) | 10. ........................ |
| சைக்கிள் டைனமோ | 11. ........................ | மின்சக்தி |
| மின்னமுத்தி | 12. ........................ | 13. ........................ |

சூரியக்கலம்

➢சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்ற சூரியக்கலம் பயன்படும்.
➢சூரிய கல ஆக்கத்தில் பயன்படும் மூலகம் சிலிக்கன் (Si) ஆகும்.
➢பல சூரியக்கலங்களை தொடராக இணைத்த சூரியக்கலத் தொகுதி சூரியப்படல் எனப்படும்.
➢சூரியக் கலம் ஒன்றின் உயர் வோல்ற்றளவு 0.75V ஆகும்.

பிரதிகூலங்கள்

14. சூரியக் கலங்களின் விலை .................... (அதிகம் / குறைவு)
15. எல்லா தேவைகளுக்கும் பயன்படுத்த .................... (முடியும்/ முடியாது)
16. இரவில் பயன்படுத்த .................... (முடியாது / முடியும்)

அனுகூலங்கள்

17. (இயற்கையான/ செயற்கையான) ....................சக்திவளம்
18. சூழலை மாசடையச் .................... (செய்யாது/ செய்யும்)

பயன்பாடுகள்

- சூரிய நீர் வெப்பமாக்கி

19. ..................................
20. ..................................

**பொறிமுறை சக்தி**

பொறிமுறை சக்தி → அழுத்த சக்தி, இயக்க சக்தி

அழுத்த சக்தி

➢ பொருள் ஒன்றின் நிலை காரணமாக ஏற்படும் சக்தி அழுத்த சக்தியாகும்.
➢ உ.ம்:-

- மரத்திலுள்ள பழம்
- நீர்தேக்கத்திலுள்ள நீர்

21. ....................................
22. ..........................

இயக்க சக்தி

➢ ஒரு பொருளின் இயக்கம் காரணமாக ஏற்படும் சக்தி இயக்க சக்தியாகும்.
➢ உ.ம் :

- வீசும் காற்று
- பாயும் நீர்

23. ..........................
24. ..........................

பொருள் ஒன்றின் அமைப்பில் அல்லது தோற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதில் சக்தியை சேமிக்கையில் அது மீளியல் அழுத்தசக்தி எனப்படும்.
உ.ம் : ஈர்க்கப்பட்ட கவண் / ஈர்க்கப்பட்ட இறப்பர் நாடா

**சக்தி நிலைமாற்றம்**

➢சக்தியின் ஒரு வடிவம் வேறொரு சக்தி வடிவமாக மாற்றப்படல் சக்தி நிலைமாற்றம் எனப்படுடு
➢உ.ம்:-

- காற்றில் இருந்து மின் உற்பத்தி
  காற்றின் இயக்கசக்தி → மின்சக்தி
- உலர் மின்கலம் மூலம் மின்குமிழில் இருந்து ஒளியைப் பெறல்
  இரசாயன சக்தி → 25. ................ → ஒளிச்சக்தி
- இசைப்பதிவு கொண்ட அழைப்பிதழ்
  மின்சக்தி → 26. ....................
- நீர் மின்வலு நிலையங்களில்
  27.................. → நீரின் இயக்கசக்தி →
  28. ................. → தைனமோவின் இயக்கசக்தி →
  29. ....................
- அனல் மின்வலு நிலையங்களில்
  30.................. → வெப்பசக்தி → சுழலியின்
  இயக்கசக்தி → 31. ................ → மின் சக்தி

**பொறிமுறை சக்தியை ஊடுகடத்தல்**

- அந்தமில் பட்டிமூலம்
- அந்தமில் சங்கிலி மூலம்
- வளிமூலம்

32. .............................
33. .............................
34. .............................

**சக்திமுதல்களில் இருந்து பெறக்கூடிய சக்திவடிவங்கள்**

- சூரியன் : வெப்பச்சக்தி,ஒளிச்சக்தி
- பெய்யும் மழை : இயக்கசக்தி

35. உயிர்த்திணிவு : ......................
36. அணுக்கரு : ......................
37. எரிமலை : ......................

**மின்சக்தி**

➢மின்னமுத்தியினால் ஆடைகளை உலர்த்தும் போது நடைபெறும் சக்தி நிலைமாற்றம்
மின்சக்தி → வெப்பசக்தி



➢மின்சக்தியின் பயன்கள்

- மின்விசிறியை இயக்குதல்
- நீரைப் பம்புதல்

38. ......................
39. ......................
40. ......................

**ஒலிச்சக்தி**

➢விஞ்ஞான ரீதியாக ஒலியில் அடங்கியுள்ள சக்தி ஒலிச்சக்தி எனப்படும்;.

- வானொலி ஒலிக்கும் போது நிகழும் சக்தி நிலைமாற்றம்
  41. மின்சக்தி → ........................
- ஒலிச்சக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

42. ...............................
43. ...............................
44. ...............................




**ஒளிச்சக்தி**

➢புவியின் மீது ஒளியை வழங்கும் பிரதான முதல் சூரியனாகும.
➢சூரிய கலத்தினால் மின் பிறப்பிக்கப்படும் போது நடைபெறும் சக்தி நிலைமாற்றம்
ஒளிச்சக்தி → 45. ........................
➢ஒளியில் அடங்கியுள்ள சக்தியைப் பயன்படுத்தி 46. .................. உணவு உற்பத்தி செய்யப்படுகின்றன.
➢இச்செயன்முறை 47. ...................... என அழைக்கப்படும்.
➢ஒளிச்சக்தி உணவினுள் 48. ...................... சக்தியாக களஞ்சியப்படுத்தப்படுகின்றது.
➢ஒளிச்சக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- பார்வையை ஏற்படுத்துதல்

49. ...........................
50. ...........................
51. ...........................
52. ...........................



**வெப்பச்சக்தி**

➢நெருப்பு சுவாலையின் அருகே கையைக் கொண்டு செல்லும் போது வெப்பச் சக்தியை உணர முடியும்.
➢வெப்பம் காரணமாக பொருள்களின் அமைப்பு மாற்றமடைதல், வெப்பமடைதல், 53. ...................... , ...................... போன்றன நடைபெறும்.
➢வெப்பச்சக்தி பயன்படும் சந்தர்ப்பங்கள்

- மின்னுற்பத்தி
- ஆடைகளை உலர்த்துதல்

54. ......................
55. ......................
56. ......................



**இரசாயனச் சக்தி**

➢இரசாயனத் தொழிற்பாடுகள் மூலம் சக்தியை பிறப்பிக்கும் பொருட்கள் இரசாயனப் பொருள்கள் எனப்படும்.

உ.ம்:-
- மெழுகுவர்த்தி
- உலர் மின்கலம்

57. ......................
58. ......................

➢ இரசாயனப் பொருட்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள சக்தி 59. ............. எனப்படும்.
➢ இரசாயனச் சக்தி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்

- மெழுகுவர்த்தி ஒளிருதல்

60. ......................
61. ......................

ஆக்கம் : செல்வி திலக்ஷனா சிவானந்தன்,
கட்டுறுபயில்வு மாணவ ஆசிரியை,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வழிகாட்டலும் ஆலோசனையும் :
திருமதி ஞானசக்தி கணேசநாதன்,
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.

# வடக்கு கிழக்கு ஆயர் மன்றமும் நான்கு மறைமாவட்டங்களினதும் கத்தோலிக்கப் பத்திரிகைகளும்

கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்
(ஊடக வருகை விரிவுரையாளர்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

வடக்கு – கிழக்கு ஆயர் மன்றமானது 18 மே 2021அன்று நினைவுகூரப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பற்றியும், உலகில் கொரோனாத் தொற்று நோய் அகன்று போக 24 ஒக்டோபர் 2020 தினத்தை செபநாளாகக் கடைப்பிடிப்பது பற்றியும் காலத்தின் தேவை கருதி அண்மையில் இரண்டு முக்கிய அறிக்கைகளை வெளியிட்ட பின்னர், வடக்கு –கிழக்கு ஆயர் மன்றம் பற்றிப் பல கோணங்களில் இருந்தும் பல கேள்விகளும் சிந்தனைகளும் பலராலும் எழுப்பப்பட்டு வந்தன.

இந்தக் கருப்பொருளை தெளிவாக்கும் நோக்கிலும் இந்த சிந்தனையை வளர்க்கும் நோக்கிலும் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழில் முதலில் 'தமிழ்ப் பேராயர் தலைமையில் தனி அலகு வடக்கு – கிழக்கு மறைமாவட்டங்களுக்கு அவசியம்' என்ற கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளின் ஆக்கத்தையும் 'எழுந்தது வலிமையான குரலொன்று' என்ற கலாநிதி எஸ்.எம். செல்வரட்ணம் அ.ம.தி (கரவையூர் செல்வம்) அடிகளாரின் ஆக்கத்தையும், 'தமிழ் மறைமாவட்டங்கள் நான்கையும் ஒன்றிணைத்து ஆழமாகப் பணியாற்ற வட கிழக்கு ஆயர் மன்றம் உதவும்' என்ற யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளின் ஆக்கத்தையும் பிரசுரித்தோம். இவ்வாக்கங்களை முகநூலில் பதிவு செய்த போது பலரும் இவ்வமைப்பை வரவேற்றும் பாராட்டியும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த முகநூல் பதிவுகளை தொகுத்துப் பின்னர் ஒரு நேரம் நோக்குவோம்.

இலங்கையின் யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,மன்னார், திரிகோணமலை என்ற நான்கு தமிழ் மறைமாவட்டங்களை இணைத்த வட கிழக்கு ஆயர் மன்றம் தொடர்பாகத் தம் ஆக்கங்களை உள்நாட்டிலோ புலம்பெயர்




நாடுகளிலோ இருந்து அனுப்ப விரும்புவோர் காலைக் கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இலக்கம் 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பலாம். மின்னஞ்சல் rmpillaio1@gmail.com

### ஆயர் மன்றக் கருவுக்கு வித்திட்டவர்

வட கிழக்கு ஆயர் மன்றக் கருவுக்கு வித்திட்டவர் மறைந்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை.

வட கிழக்கு ஆயர் மன்றம் என்ற எண்ணக் கருவை

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

1979ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆயராகிய மறைந்த மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை தூர நோக்குடன் வித்திட்டபோது யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு என இரண்டு தமிழ் மறைமாவட்டங்களே இருந்தன.

2005ஆம் ஆண்டு அப்போதைய யாழ் ஆயராகிய மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் இவ்வேண்டுகோள் புதிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட போது யாழ்ப்பாணம், திருகோணமலை – மட்டக்களப்பு மற்றும் மன்னார் என்ற மூன்று தமிழ் மறைமாவட்டங்களே இருந்தன.

ஆனால் இன்று யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், மட்டக்களப்பு என நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உள்ளன. சிலவேளை விரைவில் மேலும்




மறைமாவட்டங்கள் பிரிக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு. முகநூலில் கருத்துத் தெரிவித்த பலர் மேலும் மறைமாவட்டங்கள் பிரிக்கப்படுவது வட கிழக்கு ஆயர் மன்றத்திற்கு மேலும் வலிமை சேர்க்கும் என்கின்றனர்.

தற்போது வட கிழக்கு ஆயர் மன்றம் என்ற பெயரில் வட கிழக்கின் நான்கு தமிழ் ஆயர்களான யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு காலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை ஆகிய ஆயர்கள் ஒன்றாக இணைந்து ஏற்கனவே அறிக்கைகள் வெளியிடத் தொடங்கியுள்ளனர் என்பதும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

### நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் உருவாக்கம்

17 பெப்ரவரி 1845ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அப்போஸ்தலிக்க பரிபாலக பிரிவாக உருவாக்கப்பட்டது. பின்னர் 01 செப்ரெம்பர் 1886இல் யாழ்ப்பாணம் மறைமாவட்டமாகத் தரமுயர்த்தப்பட்டது.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தை அடுத்து திருகோணமலை மறைமாவட்டம் 25 ஆவணி 1893ஆம் ஆண்டு தனி மறைமாவட்டமாக்கப்பட்டது. 23 ஒக்டோபர் 1967 இல் திருகோணமலை மறைமாவட்டம் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மன்னார் மறைமாவட்டம் 24 ஜனவரி 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இருந்து




பிரிக்கப்பட்டு தனி மறைமாவட்டமாக பிரிக்கப்பட்டது.

03 ஜுலை 2012இல் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு என்ற புதிய மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது.

### ஊடக அறிமுகம்

மிசனெறிமாரின் முதல் விடயம் ஊடகத்தை அறிமுகப்படுத்தியதாகும்.

இலங்கை நாட்டிற்கு வந்த வெளிநாட்டு மிசனெறிமார் தமது சமயப் போதனையின் போது ஊடக அறிவைப் பரப்புவது அவர்களின் முக்கிய நோக்கம் அல்ல என்றாலும், ஊடகத்தைப் பலப்படுத்தியும் பன்முகப்படுத்தியும் அதன்வழி சமயத்தைப் பரப்பப் பல யுக்திகளைப் பயன்படுத்தினர்.

'தினகரன்' பத்திரிகையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் ஆசிரியப்பணி புரிந்த இ.சிவகுருநாதன் இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி என்ற நூலில் (பக்கம் 73) உதய தாரகையிலும் இலங்காபிமானியிலும் பரசமய கோளரி என்றும் புகழ் பெற்ற ஆறுமுகநாவலரே எழுத அனுமதித்தனர் என்றால் மிசனரிமாரின் செயல் சாதுரியத்தை என்னவென்று வர்ணிப்பது என்கிறார்.

இவ்வாறு சாதுரியமாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைப் பணி தமிழ்க் கத்தோலிக்க மறைமாவட்டங்களில்


மறைந்த யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ.தீயோகுப்பிள்ளை ஆண்டகை

வளர்ச்சிப்பாதையில் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது.

### நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் தனியான கத்தோலிக்க பத்திரிகைகள்

நான்கு தமிழ் மறைமாவட்டங்கள் உருவானவுடன் அவை தமக்கெனத் தனியான கத்தோலிக்க பத்திரிகைகளை உருவாக்கியுள்ளன.

(17 ஆம் பக்கம் பார்க்க...)



காலைக்கதிர்
Kalaikkathir

# எந்த அபிவிருத்தித் திட்டமும் இடைநிறுத்தப்படமாட்டாதாம்

## அரசு திட்டவட்டம்



அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு அபிவிருத்தித் திட்டமும் கொவிட் 19 தொற்றின் காரணமாக அல்லது வேறு காரணங்களால் இடைநிறுத்த நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர வலியுறுத்தினார்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகளுக்கான கல், மணல் மண் என்பனவற்றை விநியோகிக்கும் நிறுவனங்கள் சிலவற்றுக்கு அவற்றை தொடர்ச்சியாக விநியோகிக்க முடியாதிருப்பது தொடர்பாக அமைச்சில் அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சின்போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிடார்.

விசேடமாக மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் நிர்மாணப் பணிகள் உட்பட அரசாங்கம் முன்னெடுக்கும் பதின்மூன்று அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான கல், மணல் மண் என்பனவற்றை வழங்கும் பொறுப்பு, புவி ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு காணப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

# தனிமைப்படுத்தல் மீறிய 1,027 பேர் கைதாகினர்

கடந்த 24 மணித்தியாலத்தில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 1,027 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

உரிய முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளை கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இது வரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 30 ஆயிரத்து 42 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கு....

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி யாழ்ப்பாணம் மறைமாவட்டம் 'பாதுகாவலன்' பத்திரிகையையும் –

மட்டக்களப்பு மறைமாவட்டம் 'வெட்டாப்பு' பத்திரிகையையும்–

மன்னார் மறைமாவட்டம் 'மன்னா' பத்திரிகையையும் –

திருகோணமலை மறைமாவட்டம் 'திருமலைத்தீபம்' பத்திரிகையையும் – ஆரம்பித்து நடத்தி வருகின்றன.

இன்று ஊடகங்களே அனைத்திற்கும் அடிப்படையாக நின்று, அனைத்தையும் ஆரம்பித்து ஆக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த வகையில் ஊடகங்களின் முக்கிய பணி கருத்துருவாக்கம் செய்வதாகும்.

வட – கிழக்கு ஆயர் மன்றத்தின் உருவாக்கத்திலும் செயற்பாட்டிலும் நான்கு தமிழ் மறைமாவட்டங்களின் நான்கு தமிழ்க் கத்தோலிக்க பத்திரிகைகளுக்கும் முக்கிய தனியானதும் பொதுவானதுமான பணிகள் உண்டு. ஆயர் மன்ற உருவாக்கத்தின்போது அது பற்றிய விளக்கங்களையும் விவரங்களையும் தெளிவாகத் தந்து, அது தேவை என்ற கருத்தை முதலில் மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும். மக்கள் அறிய வேண்டிய விடயங்களையும் விவரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுத்தர வேண்டும். இவற்றையும் இவை போன்ற மேலதிக கருத்துக்களையும் நான்கு கத்தோலிக்க பத்திரிகை ஆசிரியர்களும் இணைந்து கலந்தாலோசித்து திட்டமிட்ட வகையில் நான்கு பத்திரிகைகளிலும் வெளிவர ஆவண செய்ய வேண்டும். இவர்கள் இணைந்து மேலும் செயற்பட அது பற்றிய திட்டம் ஒன்று பின்வருமாறு அமையலாம்:–

### செய்தியாளர் ஒன்றியம்

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மறை மாவட்டங்களின் செய்தியாளர் ஒன்றியம் அவசியமானது.

01. வட, கிழக்கின் நான்கு தமிழ்க் கத்தோலிக்க மறைமாவட்டங்களின் செய்தியாளர்களையும் ஒன்றிணைத்து இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மறைமாவட்ட செய்தியாளர் ஒன்றியம் என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கலாம்.

02. நான்கு மறை மாவட்ட ஆயர்களையும் பாதுகாவலர்களாகக் கொண்ட மேற்படி அமைப்பின் ஆலோசகர்களாக நான்கு மறை மாவட்டங்களின் குரு முதல்வர்கள் பணியாற்றலாம்.

03. இதன் செயற்குழு உறுப்பினர்களாக யாழ்ப்பாணம் மறை மாவட்ட பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர், மட்டக்களப்பு மறை மாவட்ட வெட்டாப்பு பத்திரிகை ஆசிரியர், மன்னார் மறைமாவட்ட மன்னா பத்திரிகை ஆசிரியர், திருகோணமலை மறைமாவட்ட திருமலைத்தீபம் பத்திரிகை ஆசிரியர் ஆகியோருடன் மூன்று செய்தியாளர்கள் ஒவ்வொரு மறைமாவட்டத்தில் இருந்தும் தெரிவு அல்லது நியமனம் செய்யப்படலாம்.

04. தலைவர் பதவியினை நான்கு பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர் காலத்திற்குக் காலம் வகிக்க, செயலர் – நிதியாளர் போன்ற பதவிப் பொறுப்புக்களை நான்கு மறைமாவட்டங்களின் செய்தியாளர்கள் இடையே காலத்திற்குக் காலம் பகிரப்படலாம்.

05. இலங்கை தமிழ் கத்தோலிக்க மறை மாவட்ட செய்தியாளர் ஒன்றியத்தின் பொது அமர்வு வருடத்திற்கு மூன்று தடவைகள் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் வரிசைக்கிரமாக நடத்தப்படலாம். அதற்கான ஒழுங்குகளை சம்பந்தப்பட்ட மறை மாவட்ட பத்திரிகை ஆசிரியர் மேற்கொள்ளலாம்.

06. நான்கு மறைமாவட்டங்களும் இணைந்த செய்தியாளருக்கான ஊடகக் கல்வி – பயிற்சி வகுப்புக்கள் மற்றும் ஒன்றுகூடல்கள் ஆண்டிற்கு ஒரு தடவை பொருத்தமான இடத்தில் ஒழுங்கு செய்யலாம்.

07. நான்கு மறைமாவட்ட பத்திரிகைகள் தமக்கிடையே செய்திகளைப் பகிர்வதற்கு செய்திச் சேவை மையம் ஒன்றை உருவாக்கலாம்.

08. நான்கு மறை மாவட்ட செய்தியாளர்களுக்குச் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் சிபார்சுடன் திறமைத் தெரிவின் அடிப்படையில் விருதுகள் வழங்கப்படலாம்.

# வீதியால் சென்ற மாணவியின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது

## வட்டு.கண்ணகை அம்மன் கோயிலடியில் சம்பவம்

வீதியால் சென்ற மாணவியின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மதியம் 2.00 மணியளவில் வட்டுக்கோட்டை – மாவடி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு முன்னால் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பொன்னாலையைச் சேர்ந்தவரும் வட்டு. இந்துக் கல்லூரியின் மாணவியுமான ஒருவரின் தங்கச் சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டது.

கடந்த 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மேற்படி மாணவியும் அவரது நண்பியும் பல்கலைக்கழக உளச்சார்பு பரீட்சைக்கு தோற்றுவதற்காக சங்கானை வங்கி ஒன்றில் பணத்தைச் செலுத்திவிட்டு வீடு திரும்பியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவரில் ஒருவர் மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் வைத்திருக்க மற்றையவர் மாணவியை சைக்கிளுடன் தள்ளி வீழ்த்திவிட்டு கழுத்தில் உள்ள சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார்.

மாணவி கூக்குரலிட்டவாறு நீண்ட நேரம் போராடியபோதிலும் எவரும் உதவிக்கு வராத நிலையில் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பாக வட்டுக் கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அப்பகுதி வீடொன்றில் உள்ள கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் கொள்ளையர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# கஞ்சிபானை இம்ரானின் உதவியாளர் ஒருவர் கைது

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கஞ்சிபானை இம்ரானின் உதவியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெல்லம்பிட்டிய, கொஹிலவத்த பகுதியில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் ஆவார். குறித்த நபரிடம் இருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# பறவைகளுக்கான மருந்துகளை விற்பனை செய்த ஒருவர் கைது

குவைட்டில் இருந்து இலங்கை கொண்டு வரப்பட்ட ஒரு தொகை பறவைகளுக்கான மருந்து பொருள்களுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிருக வைத்திய அதிகார சபையின் அனுமதியின்றி குறித்த மருந்துப் பொருள்கனை விற்பனை செய்தமை தொடர்பில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 38 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது 10 லட்சம் பெறுமதியான மருந்து பொருள்கள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# தினம் ஒரு விவசாயத் தகவல்

## இலை வண்ணச்சுட்டியை பயன்படுத்தி நெற்செய்கையில் உரப் பயன்பாடு

### தாவர வளர்ச்சிக்குத் தேவையான போசனை மூலகங்களுக்காக



பயன்படுத்தும் இரசாயன உரத்தை ஒரே தடவையாக விசிறாமல் இரண்டு கிழமைக்கு ஒரு தடவையாக விசிறுவதால் போசனை மூலகங்கள் தொடர்ச்சியாக கிடைப்பதை உறுதி செய்யலாம் இலை வண்ணச்சுட்டியின் பயன்பாட்டுடன் இரசாயன உரங்களை விசிறலாம்.

மூன்று அல்லது மூன்றரை மாத நெல்லினங்களுக்கு 2ஆம் கிழமை, 5ஆம் கிழமை, 7ஆம் கிழமைகளில் உரத்தை வீச வேண்டும். நான்கு அல்லது நான்கரை மாத நெல்லினங்களுக்கு 2ஆம் கிழமை, 6ஆம் கிழமை, 8 ஆம் கிழமைகளில் உரத்தை வீச வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர் Kalaikkathir

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சுமந்திரன் எம்.பியால் உலருணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம் கந்தர்மடம், அரசடிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வழங்கி வைத்துள்ளார்.

குறித்த நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் உட்பட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கொரோனா நிலைமைகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கருத்து தெரிவித்திருந்தார்.





# முல்லைத்தீவுக் காட்டில் மோட்டார் குண்டுகள் மீட்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் காட்டுப்பகுதியில் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து குறித்த இடத்தில் சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது அங்கிருந்து செயலிழக்காத நிலையில் காணப்பட்ட 15 மோட்டார் குண்டுகள் கண்டறியப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் வழங்கப்பட்டு மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

# பொலிஸ் அதிகாரிகளுக்கு கம்பஹாவில் கொரோனா

கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் மற்றும் கம்பஹா பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரி அலுவலகங்களில் இணைக்கப்பட்ட குறைந்தது 20 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

கம்பஹா சுகாதார அலுவலகர் அலுவலகம் இதனைத் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களின் தொடர்புகளாக அடையாளம் காணப்பட்ட மேலும் 40 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உட்பட சுமார் 100 பேர் வீட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# கொரோனாத் தடுப்பூசி பெறுவதில் மட்டக்களப்பில் மக்கள் ஆர்வம்

மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான பகுதிகளில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இப்பகுதிகளிலுள்ள மக்கள் கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று (சனிக்கிழமை) காலை, சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தலைமையில், மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதில் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள மக்கள், தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்கு வருகை தந்திருந்தனர்.

# கீரிமலை மாளிகையை வழங்க முனைப்பு கொரோனாக் காலத்தில் காட்டுவது ஏன்?

## சி.வி.கே. கேள்வி



கீரிமலையில் மக்களின் நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை கொரோனாத் தொற்றுக் காலத்தில் அவசரப்பட்டு வழங்குவதற்கான தேவை என்ன என வட மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கேள்வியெழுப்பியுள்ளார்.

யாழில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர் -

இந்தக் கட்டடத்தை மாகாண சபைக்கு கையளிக்க வேண்டும் என்ற தீர்மானம் வட மாகாண சபையில் 2016 ஆம் ஆண்டு முன் வைக்கப்பட்டது என கூறினார்.

மேலும் குறித்த பிரேரணை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் தற்போது அவசரம் காட்டுவது ஏன் என்றும் கேள்வியெழுப்பினார்.

தொடர்ந்தும் கடற்படையினரின் வசமுள்ள கீரிமலை ஜனாதிபதி மாளிகையை சர்வதேச விருந்தினருக்கான சந்திப்பு நிலையம் எனும் பெயரில் இலங்கை முதலீட்டு சபை ஏலத்தில் வழங்கவுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் மக்களின் காணிப் பிரச்சினை தீர்க்கப்படாமல் அரசாங்கம் அந்தப் பகுதியை எவ்வாறு மற்றவர்களுக்கு வழங்க முடியும் என வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத்தின் தலைவர் அருணாசலம் குணபாலசிங்கம் கேள்வியெழுப்பியுள்ளார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற முதலீட்டுத் திட்டத்தின் கீழ், கீரிமலையில் மக்களின் நிலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகை, கூறுவிலை கோரல் மூலம் வெளியாருக்கு வழங்கப்படவுள்ளமை தற்போது பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது.

# இனப் படுகொலையும் .......

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரியெனப்பட்டதை உரக்கச் சொல்ல மனதில் உண்மை வேண்டும். அந்த உண்மையில் தைரியம் வேண்டும். தமிழ்மக்களுக்கு அதனைச் செய்யவேண்டிய கடமையிருந்தது. ஓர் ஊழியத்தின் கடப்பாடும் பிராயச்சித்தமாக நின்றது.

நான் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் எழுதியவற்றிலும் இத்தொடரில் சொன்னவற்றிலும் அவர் எவ்வளவான ஓர் அத்திவாரத்தை இந்திராகாந்தியுடனும் ராஜீவ் காந்தியுடனும் இணைந்து தமிழர்களுக்காகக் கட்டியெழுப்பினார் என்பது புரியும். அந்த அத்திவாரத்தில நாம் வியூகித்த கட்டடத்தை எழுப்பியிருக்க வேண்டும். ஆனால், அவரது அழிவிற்குப் பின் கொடி கட்டிப் பறந்தோம். பின் கொடிகளைத் தூக்கிக் கொண்டு எல்லாத் தலைநகரங்களிலும் கூக்குரல் போட்டோம். ஆர்ப்பாட்டங்கள் நடத்தினோம். நோர்வே, ஜப்பான், ஜெனிவா என்று சுற்றுப்பேச்சுக்கள் செய்துவிட்டு இந்திய ஒப்பந்தத்தின் கீழோ அல்லது 13ஆம் சரத்தில் அமிர்தலிங்கம் விரித்த பாயில் படுப்பதற்கோ, இருப்பதற்கோ இடம் தேடுகிறோம்.

இதனைத்தான் வள்ளுவர் "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அவன் கண்விடல்" - என்று சொன்னார். அந்த யதார்த்தத்தை உணராமல் உணர்ச்சிகளில் குளிர் காய்ந்தோம்.

**113. அந்த யதார்த்தம்?**

அதனைநான் சொல்வதிலும் பார்க்க அவரது கட்சி அங்கத்தினரும் இளைஞர் பேரவை அணியின் முக்கியஸ்தரும் விசுவாசியும் ஓர் அஞ்சலிக்கூட்டத்தில் சொன்னவற்றை அரவது எழுத்தாக்கத்திலேயே தருகிறேன்.

"03.09.2017அன்று யாழ். மாநகர சபை நூலக அரங்கில் கோலாகலமாக எடுக்கப்பட்ட அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் 90ஆவது பிறந்ததின வைபவத்தில் நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்காக என்னைக் கனடாவிலிருந்து அழைத்திருந்தார்கள். நான் உரையாற்றிக் கொண்டிருக்கையில் வடமாகாண சபை சபாநாயகராக இருக்கும் சீவிக்கத் தெரிந்த திரு சீ.வி.கே. சிவஞானம் அவர்கள் மண்டபத்துக்குள் நுழைந்தார். முன் ஆசனத்தில் அட்டனக்கால் போட்டபடி அமர்ந்தார். அந்நிலையில் என் பேச்சின் திசையினைத் திருப்பினேன். அவரை விளித்து பின்வருமாறு பேசினேன். திரு. சிவஞானம் அவர்களே! நான் கனடாவில் இருக்கையில் நீங்கள் நிகழ்த்திய ஒரு பேச்சுப் பற்றி அறியக்கூடியதாக இருந்தது. நீங்கள் தேசியத் தலைவர்கள் இருவர்தான், ஒருவர் - தந்தை எஸ். ஜே.வி.செல்வநாயகம். அடுத்தவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் என்று பேசியிருந்தீர்கள். இவர்கள் இருவரது காலங்களுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்தில் எம்மை வழிநடத்தினானே ஒரு பண்ணாகத்தான். அவன் ஒன்றுமே பண்ணாமல்தான் இருந்தானா? அவன் புண்ணாக்கு வியாபாரத்திலும் புடலங்காய் விவசாயத்திலும் தான் தன் காலத்தை விரயம் செய்தானா என்று கூறி நீண்ட அவரின் சாதனைப் பட்டியலை அந்த அவையில் நீட்டினேன்." - இவை விசுவாசியான சட்டத்தரணி கனக மனோகரனின் வார்த்தைகள்.

(வளரும்)

# இலுப்பைக்குளத்தில் கிரவல் அகழ்வை தற்காலிகமாக நிறுத்துமாறு உத்தரவு





திருகோணமலை - இலுப்பைக்குளம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வை உடன் அமுலாகும் வகையில் எதிர்வரும் திங்கட்கிழமை வரை தற்காலிகமாக நிறுத்துமாறு மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வு காரணமாக சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டதை அடுத்து உடன் களவிஜயமொன்றை மேற்கொண்டு பார்வையிட்ட போதே இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உடனடியாக இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கிரவல் அகழ்வை பரிசீலிக்க குழுவொன்றை அமைத்து நாளை திங்கட்கிழமை அது தொடர்பான முடிவை உரிய தரப்பினருக்கு வழங்குவதாகவும், அதுவரை கிரவல் அகழ்வை நிறுத்துமாறும் முடிவுகளின் அடிப்படையில் உரிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்தக் களவிஜயத்தில் அரசாங்க அதிபருடன் மாவட்ட காணி பயன்பாட்டு பிரிவின் உதவிப்பணிப்பாளர் எம்.எஸ்.கிரிசாந்தி, ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட கிரவல் அனுமதிப்பத்திரதாரர்களும் கலந்து கொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2021 இல் வெளியிடப்பெற்றது.

# எகிறும் மரண வீதம்; மேலும் 62 பேர் பலி!

## கொரோனா மொத்தச் சாவு 2,073



நாட்டில் மேலும் 62 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 31 முதல் ஜூன் 08 ஆம் திகதி வரை 07 பேரும், ஜூன் 1 முதல் 10 வரை 55 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி இலங்கையில் கொரோனா வால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.

# 22 வீத மாணவர்கள் மட்டுமே ஒன்லைன் மூலம் கல்வி கற்றல்

இலங்கையில் கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளாகக் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக மாணவர் கள் தமது கல்வி நடவடிக்கை களை முறையாக மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

ஒன்லைன் தொழில்நுட் பத்தின் உதவியுடன் கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க கல்வி அமைச்சு முயற்சித்து வருகின்றது. எனினும், இந்த முயற்சிகள் ஊடாக நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாக 22 வீத மாணவர்கள் மட்டுமே தமது கல்வியைத் தொடர்வதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாடசாலை மாணவர்களின் கல்வியை மீட்டெடுப்பதற்கான மாற்றுத் திட்டங்கள் குறித்து இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஆசிரியர், அதிபர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இடையே கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, மாற்றுத் திட்டமாக அனைத்து அரசு மற்றும் தனியார் தொலைக் காட்சிகளும் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமூகமயமாக்கல் குறித்த மாணவர்களின் மனப்பான்மையை வளர்ப்பதற்கு விரிவுரைகளுக்குப் பதிலாக கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ஆரம்பிக்க வேண் டும் என்றும் இதன்போது பரிந்துரைக்கப் பட்டது.

மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக எந்தவொரு உதவியையும் வழங்க தயாராக உள்ளதாக இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த தொழிற் சங்கங்களின்பிரதிநிதிகள்தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கீரிமலை ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்., கந்தர்மடம், அரசடிப் பகுதியில் அதிகரித்த கொரோனாத் தொற்றுக் காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று வழங்கி வைத்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

'கீரிமலை ராஜபக்ஷ மாளிகை' என நாங்கள் அறிந்துகொண்டிருக்கின்ற இந்த இடமும் விற்பனைக்கு விடப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. நாட்டை விற்கின்ற அவர்களுடைய இன்றைய திசையிலே இதுவும் ஒரு பகுதி. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில் இந்த மாளிகை அமைக்கப்பட்டபோதே தமிழ் மக்களின் பல ஏக்கர் காணிகள் அங்கு இருந்தன. அந்தக் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. சுவீகரிக்கப்பட்ட காணிகளை விடுக்குமாறு வழக்குகளும் நடைபெறுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷவின் ஜனாதிபதி மாளிகை மத்திய அரசுக்குத் தேவையில்லை என்று அன்று கூறினார் .

மைத்திரிபால அவ்வாறு கூறியபோது, முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபைக்கு இந்த மாளிகையை வழங்குமாறு கோரினார். இந்த மாளிகையை வடக்கு மாகாண சபைக்கு வழங்குமாறு கோரி மாகாண சபையில் தீர்மானம்கூட நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்படியான நிலையில் இந்த மாளிகையை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க முயற்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.




# கடற்பகுதி ஆய்வின் பின்பே மீன்பிடி நடவடிக்கை ஆரம்பம்

## பிரதமர் மஹிந்த ஆலோசனை



விபத்துக்குள்ளான 'எக்ஸ் – பிரஸ் பேர்ள்' கப்பலால் ஏற்பட்ட பாதிப்பு காரண மாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ள பாணந்துறை முதல் நீர் கொழும்பு வரையான கடற்பகுதியில் முறையான ஆய்வுக்குப் பின்னர் விரை வாக மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

'எக்ஸ் – பிரஸ் பேர்ள்' கப்பல் தொடர்பில் அலரிமாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல், மீன்வளம், பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் கவனம் செலுத்தி, கப்பல் தீயால் ஏற்பட்ட சேதங்களை முழுமையாக மதிப்பிடவும், சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்திடமிருந்து முழு இழப்பீட்டைப் பெறுவதற்கும், கப்பலை வெளியேற்றுவதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் பிரதமர் இதன்போது அறிவுறுத்தினார்.

சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின்தலைமையில்முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவித்தார்.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை கப்பல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவ சமூகத்தினருக்கும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் எனவும் பிரதமர் இதன்போது உறுதியளித்தார்.

# கொரோனாச் சட்ட விதியை மீறிய 30 ஆயிரம் பேர் கைது

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய மேலும் 1,027 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் 30 ஆயிரத்து 42 பேர் கைது செய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

தலங்கம பகுதியில் ட்ரோன் கமராக்கள் மூலம் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கண்காணிப்பின்போது, தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாணத்துக்குள் நுழையும் மற்றும் வெளியேறும் 14 பகுதிகளில் நேற்று மாத்திரம் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, மாகாண எல்லைகளை மீறிப் பயணித்த 91 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இன்றும் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப் படுகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

# முள்ளியவளையில் நால்வர் சிக்கினர்!

முள்ளியவளை – வற்றாப்பளை வீதியில் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறி வீதியில் பயணித்த புதுக்குடியி ருப்பைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வர் முள்ளியவளைப் பொலிஸாரால் நேற்று நண்பகல் கைது செய்யப் பட்டுள்ளார்கள்.

பயணத்தடை காலத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.


புதுக்குடியிருப்பில் இருந்து வற்றாப்பளைக்குச் சென்ற புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இருவர் மற்றும் வற்றாப்பளையைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டு முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

# கொரோனா பெருந்தொற்றுடன் நேற்றும் 2,340 பேர் அடையாளம்

இலங்கையில் நேற்றும் 2 ஆயிரத்து 340 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 21 ஆயிரத்து 263 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து



516 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 73 ஆக எகிறியுள்ளது.